Registered as a News paper    பக்கங்கள் - 08    விலை - ரூபா 07

# ஈழநாதம்

மட்டக்களப்பு பதிப்பு    மக்கள் நாளிதழ்

Eezhanatham

இலவச பிரதி




நாதம் 01    திருவள்ளுவர் ஆண்டு 2035    வைகாசி 23    05. 06. 2004    சனிக்கிழமை    ஓசை 30

## கதிரவெளியில் தியாகி திலீபன் மருத்துவமனை திறப்பு!

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கதிரவெளிப் பிரதேசத்தில் நேற்று வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு தியாகி திலீபன் மருத்துவமனை ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசத்தில் திறக்கப்பட்டுள்ள 12வது தியாகி திலீபன் மருத்துவமனை இதுவாகும். இந்நிகழ்வில் தியாகி திலீபனின் படத்துக்கு ஈகச்சுடரை டாக்டர். ஞானரெட்ணம் ஏற்றியதுடன் நிகழ்வு ஆரம்பமானது.

தியாகி திலீபன் படத்துக்கு மலர்மாலையினை கிராம சேவை உத்தியோகத்தர் சிங்காரவேல் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் பொற்குணம் மாலதி, பொன்மணி, ஆண்டான்குளக் கோட்டப் பொறுப்பாளர் பாஸ்கரன் ஆகியோர் அணிவித்தனர். அகவணக்கத்தின் பின்னர் தியாகி திலீபன் மருத்துவமனை

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## மட்.உணவு விடுதி பெண்கள் மீது சேட்டை மூவர் வைத்தியசாலையில், ஒருவர் கைது!

(எம்.யுவராஜ்)

மட்டக்களப்பு நகரிலுள்ள உணவு விடுதியில் ஏற்பட்ட சம்பவமொன்றையடுத்து இரு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் மூவர் காயமடைந்து மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மற்றுமொரு நபர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு லெட்சுமி பவான் உணவு விடுதிக்கு நேற்று பிற்பகல் வந்த இரு இளைஞர்கள் அவ்வுணவு விடுதியில் பணி புரியும் பெண்களோடு தகாத வார்த்தைகள் பேசி உளப் புண்படுத்தலில் ஈடுபட்ட போது நிலைமையை அவதானித்த கடை உரிமையாளர் மேற்படி இரு இளைஞர்களையும் எச்சரிக்கை செய்து அனுப்பியுள்ளார். பின்னர் அந்த இளைஞர்களும் மேலும் பலரைக் கூட்டி வந்து கடைக்குள் புகுந்து ஊழியர்களைத் தாக்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தின் போது ஏற்பட்ட மோதலில் மூவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இதனையடுத்து சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்த பொலிசார் கல்லடியைச் சேர்ந்த சுதர்சன்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

# தமிழ் கூட்டமைப்பு எம்.பிக்களை தமிழ்ச்செல்வன் இன்று சந்திக்கிறார்!

## அரசின் பின்னடிப்பு குறித்து இன்று ஆராயப்படும்

(நமது நிருபர்)

**தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இன்று சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.**

சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது தொடர்பாக நோர்வேப் பிரதிநிதிகளிடம் விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள மனிதாபிமான ரீதியிலான யோசனைகளை ஏற்று சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்காது இழுத்தடிப்பு நடவடிக்கையினையே அரசு மேற்கொண்டு வருகிறது. இது தொடர்பாக சர்வதேச சமூகத்திடம் தெளிவுபடுத்துவது குறித்தும் தமிழ்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## கண்ணிவெடி அகற்றும் வெல்லாவெளிக்கு சீடா நிறுவனப் பிரதிநிதிகள் நேற்று விஜயம்

(எம்.யுவராஜ்)

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்ட சீடா நிறுவனத்தின் பிரதிநிதிகள், மெக் நிறுவனம், தமிழர் புனர்வாழ்வுக் கழகம், யுனிசெப் ஆகிய நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ள னர்.

நேற்று கலந்துரையாடல்களை மேற்கொண்ட இவர்கள் வெல்லாவெளியில் கண்ணிவெடி அகற்றும் இடத்தையும் சென்று பார்வையிட்டனர்.

இங்கு கண்டெடுக்கப்பட்ட ஆறு கண்ணிவெடிகள் செயலிழக்கச் செய்யப்பட்டன.

சீடா நிறுவனத்திலிருந்து எலிசெபத் கெடின், சீலாரிச்சட்ஸ் ஆகியோரே வருகைத் தந்திருந்தனர்.

## கல்முனை மாநகர சபையில் அலுவலகப் பணிகள் முடக்கம்

(கல்முனை நகர்)

கல்முனை மாநகரசபைக்கு புதிதாக இடமாற்றம் பெற்ற இலிகிதர்கள் இதுவரை தமது கடமையை பொறுப்பேற்காததால் மாநகர சபை கருமங்கள் தேக்கமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு கிழக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சின் செய

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## முஸ்லிம் அரசியல் கட்சி அமைப்பது பற்றி கருத்தரங்கு

(கல்முனை நகர்)

வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் எதிர்காலமும் புதிய அரசியல் கட்சியின் உதயமும் எனும் தலைப்பில் இன்று கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

காலை 9.30 மணிக்கு நடைபெறும் கருத்தரங்கினை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மயோன் முஸ்தபா ஏற்பாடு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இக்கருத்தரங்கில் புதிய அரசியல் கட்சி ஒன்றை அமைப்பது தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது. முஸ்லிம் கல்விமான்கள், புத்திஜீவிகள், வர்த்தக சமூகத்தினருக்கும் ஏற்பாட்டு குழுவால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## சர்வதேச கூட்டுறவு தினம்

(சிவா)

82வது சர்வதேச கூட்டுறவு தினம் 2004 ஜுலை மாதம் 5ம் திகதி சனிக்கிழமை கொண்டாடப்படவுள்ளது. அதனை நினைவு கூருமுகமாக பாடசாலை மாணவர்களிடையே பேச்சு, கட்டுரை, சித்திரம், பொது அறிவு என போட்டிகள் இடம்பெறவுள்ளது.

மாவட்ட, மாகாண,தேசிய ரீதியில் நடாத்தப்படும் இப்போட்டிகளில் தரம் 10-11 வரை ஒரு பிரிவாகவும் 12-13 ஒரு பிரிவாகவும் இப்போட்டிகள் நடைபெற இருக்கிறது.

இவற்றில் மாவட்ட மட்டப் போட்டிகளுக்கான ஒழுங்குகளை கல்முனை மாவட்ட கூட்டுறவுச் சபையினர் திட்டமிட்டு வருகின்றனர் என்று கல்முனை மாவட்ட கூட்டுறவுச் செயலர் சுற்றுநிருபம் மூலம் பாடசாலைகளுக்கு அறிவித்துள்ளார்.

## மட்.சிறைச்சாலைக்கு ரவூப் ஹக்கீம் விஜயம்

(எம்.யுவராஜ்)

முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரவூப்ஹக்கீம் நேற்று முன்தினம் மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு விஜயம் மேற்கொண்டார்.

கடந்த தேர்தல் காலத்தில் பொலிசாரால் கைது செய்யப்பட்டு தற்போது மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமது ஆதர

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## அக்கரைப்பற்றில் கைதானவர்களுக்கு தொடர்ந்து விளக்க மறியல்

(அக்கரைப்பற்று நிருபர்)

அக்கரைப்பற்று விசேட அதிரடிப்படை முகாம் அருகில் கடந்த மாதம் 19ம் திகதி இரவு ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்ட பேரின்பம் ஜெயக்குமார், சரவணமுத்து சாந்தகுமார் ஆகிய இரு இளைஞர்களையும் எதிர்வரும் 18ம் திகதி வரை தொடர்ந்து விளக்க மறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்ற நீதவான் ரி.எல்.ஏ.மனாப் நேற்று உத்தரவிட்டார்.

இரு சந்தேக நபர்களும் எதிர்வரும் 17ம் திகதி மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற அடையாள அணிவகுப்புக்காக நியமிக்கப்பட்டமையை காரணம் காட்டி மட்டக்களப்பு சிறைச்சாலை அதிகாரி அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்றுக்கு இருவரையும் ஆஜர்படுத்தாமல் கடிதம் ஒன்றை சமர்பித்ததை அடுத்தே நீதவான் மேற்சொன்ன

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

### இன்றைய நாளில்

தியாகி சிவகுமாரன்

பொன்னுத்துரை சிவகுமாரன்

உறும்பிராய்

(26.08.1950-05.06.1974)



உரும்பிராயில் சிங்களப் பொலிசார் முற்றுகை யிட்ட போது, தமிழீழ விடுதலைப் போரில் முதன்முதலில் சயனைட் அருந்தி வீரச்சாவடைந்தவர் என்ற பெருமையோடு தன்னைத்தானே அழித்தார். இவ்வீரனின் நினைவு நாள் இன்று.

### கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்

கடலில் சேரும் விவசாய உரங்களில் இருந்து பெறப்படும் நைதரசனால் பல்கிப் பெருகும் பாதகமான அல்காக்கள் ஒட்சிசன் வாயுவைப் பயன்படுத்தித் தீர்ப்பதால் உலகம் பூராவும் 150 வரையான கரையோரப் பகுதிகள் இறந்த வலயங்கள் ஆகியுள்ளன.

## செய்தித் துளிகள்

### கொக்கட்டிச்சோலை சமுர்த்தி வங்கியால் சுயதொழில் கடன்

(எம்.யுவராஜ்)

கொக்கட்டிச்சோலை சமுர்த்தி வங்கியினால் வறிய மக்களின் நலன் கருதி விவசாயம், மீன்பிடி போன்ற சுயதொழில் முயற்சிகளுக்கென இன்று வரைக்கும் 845 குடும்பங்களுக்கு 46 10 000 கடன் வழங்கப்பட்டுள்ளது. விவசாயக் கடன் 87 பேருக்கும், சுய தொழில் கடன் 736 பேருக்கும் மீன்பிடித் தொழில் முயற்சிகளுக்காக 22பேருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

கடன்களைப்பெற்றுக் கொள்வதற்கென சமுர்த்தி வங்கியில் விண்ணப்பித்த விண்ணப்பதாரி ஒருவருக்கு ரூபா 50000 முதல் 25 000 வரை இக்கடன்கள் சமுர்த்தி பயன்பெறுவோருக்கு வழங்கப்பட்டுள்ளதாக மேற்படி வங்கியின் முகாமையாளர் பற்குணராசா தெரிவித்தார்

### க.பொ.த சாதாரண பரீட்சைக்கு விண்ணப்பம் கோரப்படுகிறது

(எஸ். சிவராசா)

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள கல்விப்பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள பரீட்சார்த்திகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பாடசாலைப்பரீட்சார்த்திகள் பாடசாலை அதிபர் ஊடாகவும், தனிப்பட்ட பரீட்சார்த்திகள் ஒரு பாடம் எனின் 25 ரூபாவும் 2 பாடம் எனின் 30 ரூபாவும் 3 பாடம் எனின் 35 ரூபாவும் 4 பாடம் எனின் 40 ரூபாவும் 5 பாடம் எனின் 55 ரூபாவும் 6-10 பாடம் எனின் 70 ரூபாவும் எனபரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டும். எனவும் விண்ணப்பிப்பதற்கான இறுதித்திகதி யூன்மாதம் 30ம் திகதி எனவும் பரீட்சைத்திணைக்களம் அறிவித்துள்ளது.

### சம்பூரில் திலீபன் மருத்துவ மனை திறப்பு

(எஸ். சிவராசா)

திருமலை மாவட்டத்தின் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான சம்பூரில் திலீபன் ஞாபகார்த்த மருத்துவ மனைதிறந்து வைக்கப்பட்டது. வியாழக்கிழமை 10.00 மணிக்கு நடைபெற்ற இத்திறப்பு விழாவில் திருமலை மாவட்ட மகளிர் அரசியல் பொறுப்பாளர் காருண்யா தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் தளபதி கேணல் சொர்ணம், கேணல் பானு, ஆகியோர் கலந்துகொண்டு வைத்திய மனையைத் திறந்து வைத்தனர்.

மூதூர் பிரதேச அரசியல் பொறுப்பாளர் தங்கன், மூதூர் இராணுவப்பொறுப்பாளர் இசை அரசன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

### தம்பிலுவில்லில் புதிய தொலைபேசி இணைப்பு

(சுவேந்திரா)

தம்பிலுவில் பிரதேசத்தில் புதிதாக தொலைபேசி இணைப்புக்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா ரெலிக்கொம் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தொலைபேசி இணைப்புக்கள் வழங்குவதில் ஏற்பட்ட காலதாமதம் குறித்து தமிழ் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் க.பத்மநாதன் அவர்களின் கவன த்திற்கு கொண்டுவந்ததையடுத்து. இணை ப்பிற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகி ன்றன

### காரைதீவில் வாகனவிபத்து

(சிவா)

காரைதீவுக் கிராமத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணியளவில் வாகன விபத்தொன்று இடம் பெற்றது.

பிரதான வீதியில் இருந்து உள் நுழையும் மத்திய வீதியிலேயே இவ்விபத்து இடம் பெற்றது. பிரதான வீதியை நோக்கி சென்ற வைத்தியருக்குச் சொந்தமான காரும் வீதியைக் கடக்க முயன்ற மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதியதனால் மோட்டார் சைக்கிள் பலத்த சேதம் அடைந்தது. சாரதி மயிரிழையில் உயிர்தப்பினார்.

# நடேசன் கொலைக்கு காரணமானவர்களை கைது செய்ய சர்வதேசம் அழுத்தம் கொடுக்க வேண்டும்

## சுனந்த தேசப் பிரிய

(கொழும்பு நிருபர்)

ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் படுகொலையில் சம்பந்தப்பட்ட கொலையாளிகளைக் கைதுசெய்து, அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது தான், அரசு ஊடகவியலாளர்களுக்கு அளிக்கும் கௌரவமாக அமையும். இப்படிக் கூறினார் சுதந்திர ஊடகவியலாளர் அமைப்பின் பணிப்பாளர் சுனந்த தேசப்பிரிய. நெல்லியடி மத்திய மகா வித்தியாலய முன்றலில் நேற்று முன்தினம் நடந்த நடேசனின் இறுதிக்கிரியையயொட்டிய வீரவணக்கக் கூட்டத்தில் இரங்கலுரை நிகழ்த்துகையி லேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றிய த்தின் தலைவர் இரா.துரை ரத்தினம் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் அவர் பேசுகையில் மேலும் கூறியதாவது ஊடகவியலாளர் நடேசன் தான் சார்ந்த மக்களின் அவலங்களை அவர்களின் மன உணர்வுகளை தமது ஆக்கங்கள் மூலம் வெளிப்படுத்தினார் எமது அமைப்பில் இணைந்து ஒன்று பட்டுச் செயற்பட்டார்.

அவரின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றப் பெரும்எண்ணிக்கையான ஊடகவியலாளர்கள் தெற்கிலிருந்து இங்குவரவிருந்தனர். வார இறுதியானபடியால் வாரப் பத்திரிகைகளைப் பூர்த்திசெய்யவேண்டிய நிலை இருந்ததால் அவர்களால் வரமுடியாமற்போய் விட்டது. சிங்கள, தமிழ், முஸ்லிம், பௌத் தம், கிறிஸ்தவம், இந்து என மதத்தாலும் இனத்தாலும் ஊடகவியலாளர் வேறுபட்டாலும் சகலரும் ஒரே விதமான ஊடகப் பணியையே மேற்கொள்கின்றனர். ஊடகவியலாளர் இன, மத வேற்றுமைகளுக்கு அப்பால் ஒன்று பட்டுச் செயற்படுகிறார்கள். மக்களுக்குச் செய்தி கூறுவதுதான் அவர்கள் பணி.ஆனால், ஊடகவியலாளர்கள் பல நெருக்கடிகளை எதிர் நோக்குகிறார்கள். அரசியல் கட்சிகளாலும், சில ஆயுதக் குழுக்களாலும் இந்த நெருக்கடி அவர் களுக்கு ஏற்படுகின்றது.

2000ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல் முடிந்த கையோடு யாழ்ப்பாணத்தில் நிமலராஜன் கொலைசெய்யப்பட்டார். ஆனால், இன்றுவரை கொலையாளிகளை அரசு கண்டுபிடிக்க வில்லை. அதேபோன்று 2004 இல் தேர்தல் முடிந்தபின் கிழக்கில் நடேசன் கொல்லப்பட்டுள்ளார். இந்தக் கொலையைச் செய்த கொலையாளிகளைக் கைது செய்து அவர்களுக்கு எதிராக அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். அதுவே ஊடகவியலாளர்களுக்கு அரசு அளிக் கும் கௌரவமாக இருக்கும். இதேபோன்றுதான் தெற்கில் கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களான ரிச்சாட் சொய்ஸா, றோகணகுமார ஆகியோரின் கொலையாளிகளையும் அரசு இன்னமும் கைது செய்யவில்லை. நடேசனின் கொலைக்குக் காரணமா னவர்களைக் கைதுசெய்யுமாறு இலங்கை அரசுக்கு சர்வதேச அமைப்புகள் அழுத்தம் கொடுத்து வருகின்றன. இந்தக் கட்டத்தில் அரசுக்கும் ஆயுதம் தாங்கிய குழுக்களுக்கும் வேண்டுகோள் ஒன்றை விடுக்க விரும்புகிறேன்.ஊடகவியலாளர்கள் நேர்மையாகவும் சுதந்திரமாகவும் பணியா ற்ற அனுமதிக்க வேண்டும். இதுவே உண் மைகள் வெளிவர உதவும் என்றார் அவர்.

# சிறிலங்கா இராணுவத் தளபதி ஓய்வு பெறுகிறார் புதிய தளபதியாக சாந்தகொட்டகொட?

(கொழும்பு நிருபர்)

இராணுவத் தளபதி, முப்படைகள் மற்றும் பொலிஸ் ஆகியவற்றின் சிரேஷ்ட அதிகாரி ஆகிய பதவிகளில் இருந்த லெப்டினன்ட் ஜெனரல் பலகல்ல இம்மாதத்தோடு ஓய்வு பெறுவார் என்பது உறுதியாகிவிட்டது. எனினும், அதற்குப் பின்னர் அவருக்கு வெளிநாட்டுக்கான தூதுவர் போன்ற இராஜதந்திரப் பதவிகள் வழங்கப்படுவதில் நெருக்கடிகள் இருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. இராணுவத் தளபதி என்ற முறையில் ஜெனரல் பலகல்லவின் மூன்றாவது பதவி நீடிப்பு எதிர்வரும் 30 ஆம் திகதி காலா வதியாகின்றது. அத்தோடு, ஜூன் 15ஆம் திகதி அவர் 59 வயதை எட்டுகின்றார்.

அதற்குப் பின்னர், அவரது பதவிக் காலத்தை நீடிப்பதில்லை என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முடிவு செய்திருக்கின்றார் எனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் தெரிவித்தார்.முப்படைகள் மற்றும் பொலிஸின் சிரேஷ்ட அதிகாரி பதவியை தற்போது ஜெனரல் பலகல்லவுக்கு அடுத்து படைத்தளபதிகளில் சிரேஷ்ட நிலையில் இருக்கும் கடற்படைத் தளபதியான வைஸ் அட்மிரல் தயாசந்தகிரிக்கு வழங்க ஜனாதிபதி முடிவு செய்திருக்கின்றார் என்றும் சிறில் ஹேரத் கூறினார்.

நம்பிக்கைக்குரியவருமான வைஸ் அட்மிரல் சந்தகிரிக்கு கடற் படைத்த ளபதி பதவியில் ஒரேயடியாக மூன்று ஆண்டு கால சேவை நீடிப்பை ஜனாதிபதி முன்னர் வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அந்த சேவை நீடிப்பில் இரண்டாவது ஆண்டில் கடற்படைத்தளபதி தற்போது உள்ளார். புதிய இராணுவத் தளபதியாக தற்போது இராணுவத்தில் சிரேஷ்ட அதிகரியாக இருக்கும் மேஜர் ஜெனரல் சாந்தகொட்ட கொட நியமி க்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனினும், ஐ.தே.முன்னணி அரசின் ஆட்சிக் காலத்தில் யாழ். குடாநாட்டில் வடக்குத் தளபதியாக இருந்த சமயம் கடும் போக்கை வெளிப்படுத்தி. அதன் மூலம் சிங்களப் பேரினவாதிகளின் மதிப்பைப் பெற்ற ஜெனரல் சரத் பொன்சேகா அடுத்த சிரேஷ்ட நிலையில் உள்ளார். அவரும் இராணுவத் தளபதி பதவியில் கண்வைத் திருக்கின்றார் எனவும் அவருக்காக சில அரசியல் சக்திகள் வரித்துக் கட்டிக்கொண்டு சிபாரிசு செய்து வருகின்றன எனவும் விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

தற்போது ஓய்வுபெறவிருக்கும் இராணுவத் தளபதி ஜெனரல் பலகல்லவுக்கு இராஜதந்திர வட்டாரங்களில் நற்பெயர் இருந்தாலும், அவருக்கு எதிராக இலங்கையின் மிக உச்சநிலை நீதிமன்றமான உயர் நீதிமன்றத்தினால் கடுமையான தீர்ப்பு ஒன்று ஏற்கனவே வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

2001 ஆம் ஆண்டு டிசெம்பர் 5ஆம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தல் வாக்கெடுப்பு சமயம் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேச மக்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்து தமது வாக்குகளை அளிக்க வசதி செய்யப்பட்டிருந்தது. ஆனால், மக்கள் வாக்களிக்கவருவதைப் பயன்படுத்தி வாக்காளர் என்ற போர்வையில் இராணுவக் கட்டுப்பாட்டுப்பிரதேசத்துக்குள் விடுதலைப் புலிகள் ஊடுருவ இருக்கிறார்கள் என்று உளவுத் தகவல்கள் தங்களுக்குக் கிடைத்துள்ளன எனத் தெரிவித்து வாக்காளர்களை உள்ளே வரவிடாமல் இராணுவத்தினர் தடுத்தனர். இவ்வாறு இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான வாக்காளர்கள் வாக்களிக்கவரும் பாதைகளை கிழக்கிலும், வன்னியிலும் மூடுவதற்கான உத்தரவை இராணுவத்தளபதி என்ற முறையில் ஜெனரல் பலகல்லவே வழங்கியிருந்தார். அதனால், சுமார் மூன்று லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்க முடியாது போயிற்று.

இந்த நடவடிக்கையை ஆட்சேபித்து ஐந்து வாக்காளர்கள் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுக்களைத் தாக்கல் செய்தனர். அவர்களின் வாதங்களை ஏற்றுக் கொண்ட உயர் நீதிமன்றம், இராணுவத் தளபதியின் தான்தோன்றித்தனமான நடவடிக்கையால் மக்களின் வாக்களிக்கும் அடிப்படை உரிமை மீறப்பட்டி ருப்பதாகக்கடும் கண்டனம் தெரிவித்தது.

மனு தாரர் ஒவ்வொருவருக்கும் இராணுவத் தளபதி ஜெனரல் பலகல்ல தனது சொந்தப் பணத்தில் ஐம்பதாயிரம்ரூபா செலுத்தவேண்டும் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இப்படி அடிப்படை உரிமை மீறல் வழக்கில் உயர் நீதிமன்றத்தினால் கண்டிக்கப்பட்ட, தண்டிக்கப்பட்ட ஒருவருக்கு இராணுவச் சேவை ஓய்வின் பின் தூதுவர் போன்ற இராஜதந்திரப் பதவி களை வழங்குமுற்பட்டால் அது வீண் சிக்கல்களையும், குழப்பங்களையும் ஏற்படுத்தும் என விடயமறிந்த வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன. அடிப்படை மனித உரிமை மீறல்கள் தொடர்பாகக் கடும் விமர்சனங்களுக்கும், குற்றச்சாட்டுக்களுக்கும் உள்ளான மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா இராணுவ சேவை ஓய்வின் பின் ஆஸ்திரேலியவுக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்ட சமயமும் இத்தகைய பிரச்சினைகள் கிளம்பின என்பது தெரிந்ததே.

கடும் எதிர்ப்புத் தோன்றிய போதிலும், அடிப்படை உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச அமைப்புக்களின் கண்ட னத்துக்கு ஆளானதைத்தவிர, நீதிமன்றத்தின் குற்றத்தீர்ப்பு எதற்கும் ஜானக பெரேரா உள்ளாகாததனால் பிரச்சினைகள் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் இராஜதந்திரப் பதவியை அவரால் பொறுப்பேற்க முடிந்தது. எனினும், ஜெனரல் பலகல்ல இராணுவ சேவை ஓய்வி ன்பின்னர் ஏதேனும் அமைச்சுக்களின் செயலாளர் மற்றும் ஆலோசகர் போன்ற பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு வாய்ப்புண்டு எனக்கரு தப்படுகின்றது.

# விடுதலைப் போராட்டத்தின் அதிகபங்கு மாணவரிடையேயுள்ளது

## தமிழீழ மாணவர் பேரவை

(கொழும்பு நிருபர்)

எமது மக்களின் விடுதலை, மாணவர் சமூகத்திடமே தங்கியுள்ளது என்பதைப் புரிந்துகொண்டு மாணவர் சமூகம் எமக்கான நாளில் அணிதிரள வேண்டும். நாளைய திகதி 6ஆம் திகதி தமிழீழ மாணவர் எழுச்சி நாள் அனுஷ்டிக்கப்படவுள்ளது. அதனை யொ ட்டி சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையிலேயே இவ்வாறு அறைகூவல் விடுக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:எமது விடுதலைப் போராட்டத்தில் ஓர் எழுச்சி வடிவமாக உருக் கொண்டது மாணவர் போராட்டம். மாணவர் சக்தியை அழித் தொழிப்பதன் மூலம் தமிழினத்தின் போராட்ட உத்வேகத்தைச் சிதைக்கலாம் எனப் பேரினவாத அரசுகள் பல்வேறு வழிகளிலும் முயற்சித்து வருகின்றன. யாழ். இந்துக் கல்லூரி மாணவன் சஞ்சீவன் சுட்டுக்கொல்லப்பட்டது முதல் திவ்வியன் போன்ற பல்கலைக்கழக மாணவர்கள் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டமை வரையிலும், இந்த முயற்சிகளின் வடிவங்களே. பாடசாலைகளை இராணுவ முகாம்கள் ஆக்கியதும் இதற்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்குள் இருந்து வந்த எமது தாயக விடுதலைப் போராட்டம் இன்று முக்கிய காலகட்டம் ஒன்றில் உள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகிச் சுமார் இரண்டு வருடங்கள் கடந்த நிலையிலும் தமிழ்மக்கள் வாழ்வில் இயல்பு நிலை ஏற்படவில்லை. இன்றும் கூட பல பாடசாலைகள் இராணுவ ஆக்கிரமிப்பாளர்களின் முகாம்களாக மாணவ சமூகத்துக்கு ஆத்திரமூட்டும் அசிங்கமிக்க நரகலோகங்களாகவே காட்சி தருகின்றன. ஆயிரம் ஆயிரம் மாணவர்கள் சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாது அகதி முகாம்களில் இருந்து கல்வி பயிலுகின்றனர்.

# பெண்களிடம் சுயபிரயர்த்தனமிருந்தால் ஆங்கில அறிவை வளர்க்க முடியும்.

## -சட்டத்தரணி மஹ்பூபா றிபாய்தீன்-

(மருதமுனை நிருபர்)

பெண்கள் மத்தியில் சுயபிரயத்தனம் இருந்தால் மிக விரைவில் ஆங்கிலஅறிவை வளர்த்துக்கொள்ள முடியும். விஞ்ஞானம், வர்த்தகம், கணணி மற்றும் சர்வதேச தொடர்புகளுக்கும் ஆங்கிலம் மிகமிக அவசியமானதாகும்.

இவ்வாறு மருதமுனை இங்கிலிஸ் கிங்டம் அமைப்பின் மாதர் பிரிவு அங்குராற்பண வைபவம் சமீபத்தில் மருதமுனை மஸ்ஜித்துல் அக்பர் வீதியில் நடைபெற்ற போது பிரதம அதிதியாக கலந்துகொண்ட சட்டத்தரணி மஹ்பூபா றிபாய்தீன் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அமைப்பின் தலைவர் புன்னகை வேந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மஹ்பூபா றிபாய்தீன் மேலும் பேசுகையில் :- பெண்கள் ஆங்கிலம் கற்பதில் மிகவும் ஆர்வமுடையவர்களாகத் திகழ வேண்டும்.ஆங்கிலம் எல்லோருக்கும் அத்தியாவசியமான மொழியாக உள்ளது.

வறுமையில் வாழுகின்ற பல் மாணவர்கள் மத்தியில் விவேகம், ஆற்றல், சாதுர்யம் , என்பன நிறைந்து காணப்படுகிறது. இவ்வாறான மாணவர்களுக்கு ஆங்கில அறிவுக்கு வழிகாட்டுவது அவர்கள் ஆங்கில அறிவை வளர்த்துக் கொள்வதற்கு சிறந்த வழியாகும். என்று சொன்னார்.

அமைப்பின் தலைவர் புன்னகை வேந்தன் தலைமை உரையாற்றுகையில் ஆங்கிலக்கல்வியின் முக்கியத்துவத்தை கவனத்தில் கொண்டு எமதுஅமைப்பு செயற்படுகிறது இதன் அடிப்படையில் பெண்களுக்கும் பாடசாலை மாணவருக்கும் ஆங்கில அறிவுக்கான வழிகாட்டலை பல தரப்பட்ட வழிகளில் செய்து வருகிறோம்.

பெண்கள் மத்தியில் ஆங்கில மொழியின் முக்கியத்துவம் மிகவும் குறைந்து காணப்படுகின்றது. சிலர் எழுதினாலும் வாசித்தாலும் பேசுவதற்கு வெட்கப்படுகிறார்கள். இந்த நிலை மாறவேண்டும்.அல்லது மாற்றியமைக்கப்பட வேண்டும்.என்று சொன்னார்.

நிகழ்வில் அமைப்பின் செயலாளர் பீ.எம்.முபீன் ,பொருளாளர். அமீன் உட்பட அதிகமான பெண்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்குப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா இன்று

(எம்.யுவராஜ்)

கிழக்குப் பல்கலைக்கழக வருடாந்த பொதுப் பட்டமளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு கல்லடி விபுலானந்தா இசை நடனக் கல்லூரி மண்டபத்தில் பதில் உபவேந்தர் பேராசிரியர் சி.ரவிந்திரநாத் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் வர்த்தக முகாமைத்தும், விஞ்ஞானம், விவசாயம், கலை பண்பாட்டு பீடங்களைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கு பட்டம் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளதோடு வ.சிவசுப்பிரமணியம், வித்துவான் க.செபரெத்தினம் ஆகியோர் இலக்கிய கலாநிதி பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்நிகழ்வில் கலந்து கொள்ளும் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சி.வரகுணம பல்கனைக்கழக மானியங்கள் ஆணைக்கு முத்தலைவர் வி.ஆர். ஆர்.என். மெண்டிஸ்ஆகியோர் இவர்களுக்கான பட்டங்களை வழங்கி கௌரவிப்பார்.

# கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் பொதுக் கூட்டம்

(எம். யுவராஜ்)

கிழக்குப் பல்கலைக் கழக ஊழியர் சங்க 19வது பொதுக்கூட்டம் எதிர்வரும் 09ந் திகதி புதன் கிழமை மு.ப 9.30 மணிக்கு கிழக்குப் பல்கலைக்கழக மண்டபத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிழக்குப்பல்கலைக் கழக பதில்துணை வேந்தர் கலாநிதி எஸ்.ரவீந்திரநாத் சிறப்பு விருந்தினராக கிழக்குப் பல்கலைக்கழக பதில் பதிவாளர் ஏ.டி. ஹரிஸ்,கிழக்குப் பல்கலைக்கழக நிதியாளர் கே.என். பிரேமச்சந்திர ஆகியோர்கலந்து கொள்ள வுள்ளனர்.



சிறிலங்கா முஸ்லிம் இளைஞர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்ட முஸ்லிம் பாடசாலை மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிப் பாசறை கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற போது சம்மேளனத்தின் தேசியத் தலைவர் ஐ.எல்.எம்.மாஹிர் உரையாற்றுவதையும், இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்த அதிதிகளையும் படங்களில் காண்கிறீர்கள். படமும், தகவலும்: கல்முனை சமீர்

# மாபெரும் விளையாட்டு விழா

(எம்.யுவராஜ்)

மட்டக்களப்பு விளாவட்டவான் ராஜா விளையாட்டுக் கழகத்தின் 34வது ஆண்டு நிறைவை முன்னிட்டுநடத்தப்படும் மாபெரும் விளையாட்டுவிழா எதிர்வரும் 12.06. 2004ம் திகதி தொடக்கம் 13.06.2004ம் திகதி வரை இரு நாட்கள் விளாவட்டவான் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

12.ம் திகதி சனிக்கிழமை காலை ஆண்களுக்கான எல்லே பேர்ட்டியும் பி.ப2.30 மணிக்கு ராஜா சவால் கிண்ணத் திற்கான உதைபந்தாட்டப் போட்டியும் நடைபெறும்.13.06.2004 ந் திகதி ஞாயிற்றுக்கிழமை ராஜா சவால் கிண்ணத்திற்கான உதை பந்தாட்ட இறுதிப் போட்டிகளும் ,பரிசளிப்பு வைபவமும் நடைபெறும்.

# தாண்டியடி, தங்கவேலாயுதபுர பகுதிகளில் காட்டு யானைகள் அட்டகாசம் ஒருவர் பலி!

(வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோயில் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள தாண்டியடி, தங்கவேலாயுதபுரம், திருப்பதி.உமரி. சங்கமன் கிராமம் போன்ற பல கிராமங்களில் காட்டுயானைகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

காட்டு யானைகள் மேற்படி கிராமங்களுள் புகுந்து மக்களின் சேனைப் பயிர்ச் செய்கையை அழிப்பதுடன் தென்னை மரங்களையும் முறித்தும் துவசம் செய்து வருகின்றன. இதனால் இங்கு மீள்குடியேறி வாழும் ஏழை விவசாய மக்கள் சொல்லொண்ணாத் துயரத்தில் வாழ்ந்து வருகின்றார்கள். சம்மந்தப்பட்டவர்களிடம் எடுத்துக் கூறியும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அண்மையில் தங்கவேலாயுத புரத்தில் காட்டுயானை ஒரு குடும்பஸ்தரை அடித்துக் கொன்றதுடன் ஒருவருக்குப் பலத்த காயத்தையும் ஏற்படுத்தியது.

இரு வருடங்களின் முன்பு இரு உயர்தர மாணவர்கள் வயலில் இரவுக் காவலில் இருந்த வேளை காட்டு யானை அடித்துக் கொன்றமை குறிப்பிடத்தக்கது. வன பரிபால இலாகா அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரப்பட்டுள்ளது.

# தம்பிலுவில் பிரதேசத்தில் மகப்பேற்று மருத்துவமனைக்குக் கோரிக்கை

(சுவேந்திரா)

தம்பிலுவில் பிரதேசத்தில் மகப்பேற்று வைத்தியசாலை இன்மையால் கர்ப்பிணித் தாய்மார்கள் பல்வேறுபட்டஅசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். இதனால் இப்பிரதேச கர்ப்பிணித் தாய்மார்கள் பலர் பரிதாபமாக உயிரிழக்கும் சம்பவங்களும் ஏற்படுகின்றன. தம்பட்டை, தம்பிலுவில், கள்ளியந்தீவு, விநாயகபுரம், காயத்திரி கிராமம், தாண்டியடி, கோமாரி, தங்கவேலாயுதபுரம் போன்ற கிராமங்களைச் சேர்ந்த மக்கள் திருக்கோயில் மாவட்ட வைத்தியசாலைக்குச் சென்றே சிகிச்சை பெறுகின்றனர்.

எனவே இவற்றைக் கவனத்தில் கொண்டு வடக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சுக்கு மகஜர் ஒன்றினை இப்பிரதேச மக்களால் அனுப்பப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# கல்வியியல் கல்லூரி பயிலுனர்களுக்கு இதுவரை நியமனமில்லை!

(எஸ்.ரவீந்திரன்)

வடக்கு கிழக்கிலுள்ள 4 கல்வியியற் கல்லூரிகளில் தேசிய ஆசிரிய பயிலுனர் டிப்ளோமா பட்டத்தை முடித்து வெளியேறிய மாணவர்களுக்கு இது வரை நியமனம் வழங்கப்படாததை ஆட்சேபித்து மகஜர் ஒன்று ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

நான்கு கல்வியியற் கல்லூரிகளிலும் சுமார் 600மாணவர்கள் பாட நெறியை முடித்து வெளியேறி ஒரு வருடம் உள்ளகப் பயிற்சியை மேற் கொண்டு ஆறு மாதங்களாகியும் நியமனம் வழங்கப் படவில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டு ள்ளது. யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, அட்டாளச்சேனை, ஆகிய கல்வீயியற் கல்லூரிகளில் 2001-2003 கல்வி யாண்டில் கல்வி கற்று 2003 நவம்பரில் பாட நெறியைப் பூர்த்தி செய்துள்ளதாகவும் ஏற்கனவே உடனடி நியமனம் வழங்கப்பட்டதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. வட கிழக்கு மாகாண கல்வியியற் கல்லூரிகளின் பயிலுனர் சங்கத்தின் தலைவர் கே. ரூபன் செயலாளர் சீ.எம்.நஜீப், ஆகியோரின் ஒப்பமிடப்பட்ட கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனைக்கு புதிய மகப்பேற்று நிபுணர் நியமனம்

(வேதசகா)

கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு புதிய மகப்பேற்று வைத்திய விசேட நிபுணராக டாக்டர். கே.முகுந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரித்தானியாவில் விசேட பெண்ரோயியல் பயிற்சியைப் பூர் த்தி செய்த டாக்டர் கே.முகுந்தன் கல்முனை ஆதார வைத்தியசாலை யின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் கே.முருகானந்தம் கேட்டுக் கொண்டதற்கிணங்க சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்டள்ளார். 01.06.2004 செவ்வாயன்று அவர் கடமையேற்றார்.

# வட கிழக்கு மாகாண கல்வி அபிவிருத்திக் கூட்டம்

(வி.ரி.சகாதேவராஜா)

வடக்கு கிழக்கு மாகாண கல்வி அபிவிருத்திக் குழுக்கூட்டம் எதிர்வரும் 14,15ம் திகதிகளில் திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

24 வலயங்களின் வலயக் கல்விப் பணிப்பாளர்களும், மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளரும் இக்கூட்டத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

01.01.2004 முதல் 31.05. 2004 வரையுள்ள காலப்பகுதியில் வலயங்களில் நடைபெற்ற கல்வி நடவடிக்கைகள் பற்றிய தரவுகள் அங்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என மாகாண கல்விச் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் கேட்டுள்ளார்.

# விநாயகபுர மக்களால் பத்மநாதன் எம்.பிக்குப் பாராட்டு

(சுவேந்திரா)

தம்பிலுவில் விநாயகபுரம் பொதுமக்களால் திகாமடுல்ல மாவட்டத் தமிழ் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் பத்மநாதனுக்கு மாபெரும் வரவேற்பு நேற்று முன்தினம் நடாத்தப்பட்டது.

விநாயகபுரம் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் பெருந்திரளான மக்கள் புடைசூழ பாராளுமன்ற உறுப்பினரை வரவேற்று ஆலயத்தில் பூசை வழிபாடும் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கு கூறுகையில் தன்னை வெற்றிப் பாதையில் கொண்டு சென்று, பாராளுமன்றம் அனுப்பி வைத்த அனைத்து மக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு உங்களுக்காக என் வீட்டுக்கதவு எந்நேரமும் திறந்திருக்கும் என்றார்.

# தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு திருகோணமலையில் கருத்தரங்கு

(எம்.யுவராஜ்)


வடக்கு கிழக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில் தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கருத்தரங்கு திருகோணமலையிலுள்ள உப்புவெளி அரசாங்க விருந்தினர் விடுதியில் எதிர்வரும் 10ம், 11ம் திகதிகளில் நடைபெறும்.

இந்நிகழ்வில் வடக்கு கிழக்கு மாகாண சபையின் ஆளுனர், பிரதேச செயலாளர்கள், வடக்குக் கிழக்கைச் சேர்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பல முக்கிய அரச அதிகாரிகள் கல ந்துகொள்ளவுள்ளனர்.




# பூமியில் அதிக வெப்பம் ஏற்பட என்ன காரணம்?

நாம் வாழ்கின்ற பூமியிலே இப்பொழுது அதிகமான வெப்பநிலை. நிலவிக் கொண்டிருக்கின்றது. இதற்கு என காரணம்? மனிதன் தான் காரணம். எப்படி என்கின் றீர்களா? மனிதன் இன்று நவீனத்துவம் அடைந்து விட்டான். நவீன இயந்திரங்களைக் கண்டு பிடித்துள்ளான். இவ்வாறான நவீன ரக வாகனங்கள், நவீன ஆயுத வகைகள் தொழிற்சாலைகள் இவற்றின் பாவனைகளால் நாம் அன்றாடம் சூழலைமாசுபடுத்திக் கொண்டிருக்கின்றோம். அது மட்டுமல்ல நாம் எமது தேவைகளின் பொருட்டு அதிகளவான இயற்கைக் காடுகள் நாள்தோறும் அழித்து வருகின்றோம். இதன் காரணமாகவும் ஓசோன் படையில் தாக்கம் ஏற்படுகின்றது. மற்றும் நாம்



வீட்டிலே பாவனைக்குட்படுத்தும் மின்சாதனப் பொருட்கள் மூலமும்பல கெட்ட வாயுக்கள் வெளியேறுகின்றன. அதாவது குளிர்சாதனப் பெட்டிகளின் பாவனையினால் அதிலிருந்து வெளியேறும் மெதேன் போன்ற வாயுக்கள் மூலமும் ஓசோன் படையில் ஓட்டை ஏற்பட்டிருக்கின்றது.

பூமிக்கு மேலே வானவெளியில் ஓசோன் என்ற காற்று மண்டலம் இருக்கி ன்றது. சூரிய ஒளி நம்மை நேரடியாகத் தாக்காமல் தடுப்பது இந்த ஓசோன் படை தான். அது வெப்பத்தை வடி கட்டி பூமியை நேரடியாக சூரிய ஒளி தாக்காமல் பாதுகாக்கின்றது. வெயில் நேரடியாக நம்மைத் தாக்கினால் நாம் கருகிப் போய்விடுவோம்.


அந்த ஓசோன் படையில் ஓட்டை விழுந்து அது இப்போது பெரிதாகி விட்டது. அந்த ஓசோன் படையில் விழுந்திருக்கும் ஓட்டை எவ்வளவு பெரியது தெரியுமா? 2.8 கோடி சதுர கிலோ மீற்றர்களாகும். இது அவுஸ்தி ரேலியாக் கண்டத்துக்குச் சமம் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த ஓசோன் மண்டலத்தில் பெரிய ஓட்டை விழுந்து விட்டால் சூரிய ஒளி நேரடியாகப் பூமியைத் தாக்குகின்றது. வெயில் கடுமையாக இருப்பதற்கும் மழை இல்லாமல் போவதற்கும் இது தான் மூல காரணம்.

வெயில் தாங்காமல் செடி கொடி கள் இயற்கைத் தாவரங்கள் கருகிப் போகின்றன. அது மாத்திரமன்றி மனிதனுக்குத் தோல் புற்று நோய் ஏற்படுவதற்கும் இதுவே காரணமாக இருக்கின்றது. எனவே வெயில் படாமல் எம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் கடப்பாடு மனிதனாகிய ஒவ்வொருவருக்கும் உண்டு. இதற்கு வழி நாம் அனைவரும் இயற்கையை பாதுகாப்பது மாத்திரமன்றி மரங்களையும் நட்டு வளர்ப்பதன் மூலம் நம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும்.

# நூற்றாண்டு விழா கண்ட விமானம்

!!பறவையைக் கண்டான் விமானம் படைத்தான்!!. என்பது கண்ணதாசனின் கூற்று1903ம் ஆண்டு செப்ரெம்பர் 19ம் திகதியன்று ''கிளைடர்'' என்ற50 கிலோ எடையுள்ள விமானத்தைத் தயாரித்து பறந்து சோதனை செய்தனர்.இதுவே உலகின்



முதலாவது விமானமாகும். முதல் முயற்சி தோல்வியடைந்தாலும் தொடர்ந்து முயன்று டிசம்பர் 14, 1903 அன்று விமானத்தில் பறந்தார். ஆனாலும் 3 வினாடிகளில் 18 அடி உயரத்திற்கு பறந்து விட்டு விமானம் கீழே விழுந்து விட்டது.

தொடர்ந்து பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டு வட கரோலினாவின் கிட்டி ஹோக் என்னுமிடத்தில் 1903ம் ஆண்டு டிசம்பர் 17ம் திகதியன்று உலகின் முதல் விமா னப்பயணம் நிகழ்ந்தது. இந்த விமானத்தைக் கண்டு பிடித்து முதல் விமானப் பயணத்தை நிகழ்த்தியவர்கள் தான் ரைட் சகோதரர்கள் வில்பர் ரைட் 1912 இலும் ஆப்வில் ரைட் 1948 இலும் மறைந்து விட்டனர். ஆனாலும் அவர்களின் புகழ் இன்று உலகிலேயே பறந்து கொண்டிருக்கின்றது. இந்த 21ம் நூற்றா ண்டிலும் அவர்களின் புகழ் வாழ்கின்றது விமானவடிவில்.


உலகின் வெற்றிகரமான விமானப் பயணத்திற்கு இன்று நூறு வயதாகின்றது. அமெரிக்கச் சகோதரர்களான வில்பரும், ஆர்வில்லும் பல்வேறு பரிசோதனைகளின் முடிவில் விமானத்தைப் பறக்கச் செய்து சாதனை நிகழ்த்தினர். அந்த விமானமானது மரம், மின் கம்பிகள் மற்றும் கேன்வாஸ் என் னும் முரட்டுத்துணி ஆகியவற்றால் செய்யப் பட்டது. 12 குதிரைத் திறனுள்ள எஞ்சின் பயன் படுத்தப்பட்டது. அதன் பெயர் பிளையர் - 01 அதிகாலையில் இந்த முதல் விமானப்பயணம் ஆர்வில் ரைட்டால் ஆரம்பிக்கப்பட்டது. 12 வினாடிக்குள் 3 மீற்றர் உயரத்தில் 37 மீற்றர் தூரமே பறந்தது. தொடர்ந்து மூன்று முறைகள் சோதனை பறப்பு நிகழ்த்தப்பட்டது. ஒவ்வொரு முறையும் பயணமும், தூரமும் அதிகரித்து வந்தது. நான்காவது பயணத்தில் 59 வினாடியில் 260 மீற்றர் வரை பறந்தது.

ரைட் சகோதரர்கள் ஒரு அச்சுக் கூடத்தின் உரிமையாளர் களே ஆனால் அவர்கள் இய ந்திர தொழில் நுணுக்கத்தின் அதிகமான திறமை பெற்ற வர்கள். இவர்கள் சிறிது காலம் சைக்கிள் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அதன் பின்னர் தான் விமானத் தயாரிப்பில் ஈடுபட்டு அதில் வெற்றியும் கண்ட னர்.

*விமான வளர்ச்சி*

1783ம் ஆண்டு மனிதன் முதலில் விண்வெளிப் பயணம் மேற்கொண்டான். பாரிசில் மான்ட் கோல்பையர் சகோதரர்கள் 6000 அடியை 100 அடிக்கு மேல் விட்டமுள்ள பலூனில் பயணித்தார்.

1785 ஜனவரி 7ல் ஜின்பியரி பியான் சார்ட் என்பவரும் டாக்டர் ஜான் ஜெப்ரீஸ் என்பவரும் பலூனில் இங்கிலாந்து கால் வாயைக் கடந்தனர்.



1903 டிசம் பர் 17ல் அமெரிக்கா வில் ரைட் சகோதரர் கள் பெற்றோல் என் ஜின் பொருத்தப்பட்ட பிளையர்-01 என்ற வி மானத்தில் 12 வினா டிகள் பறந்தனர்.

1914 ஜன வரி 01ல் திட்டமிட்ட விமானப்பயணம் தொடங்கியது.

1917ம் ஆண்டு ஐரோப்பா ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா மற்றும் தென்அமெரிக்க நாடு களில் விமானப் போக்குவரத்து தொடங்கியது.

1930ல் 245 மீற்றர் நீளமுள்ள கிராமப் செப்லின் என்ற விமானக் கப்பல் கண்டு பிடிக்க ப்பட்டது.

1935ல் விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டுக் கோபுரம் நியூஜோர்க் பண்ணாட்டு விமானத்தளத்தில் நிறுவப்பட்டது.

1958ல் போயிங் 707 விமானம் கண்டு பிடிக்கப்பட்டது. இது 125 அடி நீளம், 181 பயணிகள் பயணம் செய்யலாம். அதன் வேகம் மணிக்கு 550 மைல்கள்

1969ல் கொன்கோர்ட் மிகவேக விமானம் புழக்கத்தில் வந்தது.

1970ல் 747 போயிங் விமானம் கண்டுபிடிப்பு. இதன் இறக்கைகள் 643 மீற்றர் இதன் நீளம் 707 மீற்றர். இது 420 பயணிகளை ஏற்றிச் செல்லும் மணிக்கு 945 கிலோமீற்றர் வேகத்தில் பறக்கும். ஒரே நேரத்தில்14100 கிலோமீற்றர் தூரம் பயணஞ்செய்யலாம்.

1972ல் ஆகாயக் கப்பல் ஏ-300 புழக்கத்தில் வந்தது.

இப்பொழுது பயணிகள் விமானம் என்றும், யுத்த விமானம் என்றும் ஒலியின் வேகத்தை விட வேகமாகச் செல்லும் நவீன ரக விமா னங்களும் உலகிலே புழக்கத்திற்கு வந்து விட்டன.

நூறு ஆண்டுகளுக்கு முன் ரைட் சகோதரர்கள் எடுத்த பறப்பு முயற்சி இன்று உலகத்தை சிறியதாகச் சுருக்கி விட்டது. சில மணி நேரத்துக்குள்ளேயே ஒரு உலகில் இரு ந்து இன்னொரு உலகிற்குள் மனிதனால் நுழை ந்து விட முடியும். இதற்கு முன்னோடியாக ரைட் சகோதரர்கள் கண்டுபிடித்த விமானமே காரணம் மிகையொலி விமானங்கள், விண்வெளிப் பயணங்கள், செவ்வாய்கிரக ஆராய்ச்சி, மற்றும் தற்போது சூரிய குடும்ப த்தின் எல்லையை நோக்கி மணிக்கு 39000 மைல்கள் வேகத்தில் பறக்கும் வொயோஜர்-1 விண்வெளிக் கலம் போன்றவற்றையும் ரைட் சகோதரர்களின் இந்தக் கண்டுபிடிப்பு கொண்டு வந்துள்ளது.

# அழியும் ஆபத்தை எதிர்நோக்கும்

உலக அதிசயங்களுள் ஒன்றான சீனப் பெருஞ்சுவரின் நீளம் குறைந்து கொண்டு வருவதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். விண்வெளியில் இருந்து கொண்டு பார்க்கின்ற பொழுது உலக அதிசயங்களுள் ஒன்றானதும் உலகப்புகழ் பெற்றதுமான சீனப்பெருஞ்சுவரின் நீளம் நாளுக்கு நாள் குறைந்து கொண்டு வருவதாக அதிர்ச்சி தரும் தகவலொன்று வெளியாகியுள்ளது.

1368 ம் ஆண்டு எதிரிகளின் தாக்கு தலில் இருந்து நாட்டைக் காக்க ''மிங்''



# சீனப்பெருஞ்சுவர்

வம்சத்தினரின் ஆட்சியில் கட்ட ஆரம்பி க்கப்பட்ட இப் பெருஞ்சுவர் 1644ம் ஆண்ட ளவில் கட்டிமுடிக்கப்பட்டதாக வரலாறுகள் கூறுகின்றன. சுமார் 6350கிலோ மீற்றர் நீளம் கொண்ட இச் சுவரில் இப்போது மூன்றில் ஒரு பகுதியே எஞ்சியுள்ளதாக கூறப்படுகிறது. தமது சொந்தக் தேவைகளுக்காக இதன் பெறுமதி தெரியாது இதிலிருந்து கற்களைப் பெயர்த்துச் செல்வதனாலும் கவனிப்பாரற்று இருப்ப தனாலும் பெரும் பகுதிகள் அழிந்துள்ளது. பல பகுதிகள் இச்சுவர் இருந்தஇடம் தெரியாத ளவிற்கு அழிக்கப்பட்டு கட்டடங்களும் அமை க்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் எஞ்சிய பகுதியை என்றாலும் பாதுகாக்க வேண்டும் என்பதில் சீன அரசு கவனம் செலுத்தி வருகிறது. இச் சுவரைப் பார்ப்பதற்காகவே உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் வருடம் தோறும் பல லட்சம் மக்கள் செல்வது குறிப்பிடத்தக்கது.

குதிரை, கழுதை, நாய், குரங்கு, போன்ற 18 ஜீவராசிகளுக்கு திருமணம் செய்து வைக்கப்பட்ட நிகழ்வொன்று சென்னையில் நடந்தது. உலக

# விசித்திர திருமணங்கள்

நாடுகளிடையே பகையுணர்வு அகன்று ஒற்றுமை மலரவும் இன, மத, மொழி, வேற்றுமைகள் இன்றி மக்கள் நலமும் வளமும் பெற்று வாழவும் நல்ல மழை பெய்யவும், வேண்டி இந்தத் திருமணங்கள் நடாத்தி வைக்கப்பட்டன இந்நிகழ் வின் போது இரண்டு ஏழையோடிகளுக்கும் திருமணம்செய்து வைக்கப்பட்டது.

அதன் பின்னர் வர்ஷினி யாகத்திற்கு இணையாக இறைவனின் படைப்புக்களான விலங்கினங்கள் ஊர்வன, பறப்பன போன்ற வற்றிற்கும் திருமணங்கள் செய்து வைக்க ப்பட்டன. முதலில் இரண்டு வெள்ளைக் குதிரை களுக்கு திருமணம் நடை பெற்றது.அதன்பின்பு மழை பெய்ய வேண்டி இரண்டு கழுதைக ளுக்கு திருமணம் நடந்தது.

மூன்றாவதாக மணமகனாகவும் மணமகளாக அலங்கரிக்கப்பட்ட இரு நாய்களுக்கும் திருமணம் நடைபெற்றது. அப் போது அவை குரைத்துக் கொண்டிருந்தது வேடிக்கையாக இருந்தது. அடுத்ததாக நீர் நிலைகள் எல்லாம் நல்ல வளம் பெற வேண்டி வாத்துக்களுக்கும், வான்கோழிகளுக்கும், மற்றும் முயல்களுக்கும் திருமணம் நடை பெற்றது. மேலும் நாட்டில் பால் வளம் பெருக வேண்டி பசுவுக்கும் காளைக்கும், தானியம் பெருக வேண்டி குரங்குகளுக்கும் திருமண ங்கள் செய்து வைக்கப்பட்டன.

மேலும் காக்கை , கிளி, உடும்பு, ஓணான், பாம்பு, பூனை, வெள்ளைப்பன்றி, மீன், நண்டு, ஆகியவற்றுக்கும் திருமணம் செய்துவைக்கப்பட்டது. ஒவ்வொன்றுக்கும் தாலிகட்டும் போது மேளதாளங்கள் முழங்க கூட்டத்தினர் பூக்களைத் தூவி ஆரவாரம் செய்தனர்.

# தி.மு.க.வின் கோரிக்கைகளை சோனியா நிறைவேற்ற வேண்டும்

## கருணாநிதி கோரிக்கை

(நமது நிருபர்)

தி.மு.க.வைத்த கோரிக்கைகளை வி.பி.சிங் பிரதமராக இருந்தபோது உடனுக்குடன் நிறைவேற்றியது போல தற்போதைய பிரதமர் மன்மோகன்சிங்கும் சோனியாவும்



செய்ய வேண்டும் என்று கருணாநிதி எச்சரிக்கை விடுத்து உள்ளார்.

தி.மு.க.தலைவர் கருணாநிதியின் 81-வது பிறந்த தினம் முத்து விழாவாக கொண்டாடப்பட்டது. இதனையொட்டி சென்னை தீவுத்திடலில் முத்து விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது.இக்கூட்டத்தில் முன்னாள் பிரதமர் வி.பி.சிங் உள்துறை அமைச்சர் சிவராஜ்பட்டேல், மத்திய இணைஅமைச்சர் நரேந்திரா, ஜனநாயக முற்போக்கு கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன், பா.ம.க.நிறுவனத்தலைவர் ராமதாஸ், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ. இ.கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் நல்லகண்ணு, வ.கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் வயலார் ரவி.தி.மு.க. பொதுச் செயலாளர் அன்பழகன் முஸ்லீம் லீக் தலைவர் காதர்மொய்தீன், மத்திய கப்பல் மற்றும் தரை வழி போக்குவரத்துத்துறை அமைச்சர் டி.ஆர்.பாலு, சுற்றுப்புற சூழல் துறை அமைச்சர் ராஜா, ஞானதேசிகன் எம். பி.ஏ.கே.மூர்த்தி எம்.பி. பாம.க. தலைவர் ஜி.கே.மணி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# அல்ஜீரியாவில் தீவிரவாதிகள் தாக்குதல், பத்து படையினர் பலி!

(ராய்டர்)

அல்ஜீரியாவில் தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில்



10 இராணுவத்தினர் கொல்லப்பட்டதோடு 16 பேர் காயமடைந்துள்ளனர். அல்ஜீரியாவின் துறைமுக நகரான கிஜாயாவுக்கு அருகே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. இந்த வருடத்தில் இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட மிக மோசமான தாக்குதல் இதுவென்று தெரிவிக்கப்படுகின்றது. அல்கைதா அமைப்பினரின் தாக்குதலைப் போன்றே இந்தத் தாக்குதலும் இருந்ததாக தெரியவருகின்றது.

# துருக்கியில் பெண்களுக்கு எதிரான வன்முறை அதிகரிப்பு

(ராய்டர்)

துருக்கியில் பெண்களுக்கெதிரான வன்முறைகளை அதிகாரிகள் தடுக்கத் தவறுகிறார்கள் என்று சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு கடுமையாக விமர்சித்திருக்கின்றது. துருக்கியின் பெண்களில் குறைந்த பட்சம் மூன்றில் ஒரு பங்கினர் வீட்டில் நடக்கும் வன்முறையால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் மனித உரிமைகள் அமைப்பு புதிய அறிக்கையொன்றில் தெரிவித்திருக்கின்றது. பெண்களுக்கு எதிரான வன்முறை துருக்கியில் பரவலாக சகித்



துக்கொள்ளப் படுகிறது என்றும் சமூகப் பெரியார்கள் உயர்மட்ட அரச அதிகாரிகள், நீதித்துறைப் பிரதிநிதிகள் ஆகியவர்கள் இதற்கு ஒப்புதல் அளிக்கும் நிலை இருக்கிறது. என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

பெண்களைப்பாதுகாக்கும் வகையில் துருக்கியில் சட்ட நீதி மாற்றங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. என்பதை மனித உரிமைகள் அமைப்பு ஏற்றுக்கொண்டதும் பொலிசாரும் நீதிமன்றங்களும் பெண்களுக்கு சமநீதி வழங்க மறுக்கின்றன. என்றும் தெரிவிக்கப்படுகின்றது- இந்தக் குற்றச்சாட்டுக்கு துருக்கிய அரசு இதுவரை நேரடியான பதில் எதனையும் வழங்கியிருக்கவில்லை ஆனால் இதுபரவலான பிரச்சினை அல்ல என்று மறுப்புதெரி வித்திருக்கின்ற துருக்கியின் மனித உரிமைகளுக்கான நாடாளுமன்ற குழு உறுப்பினர் ஒருவர் இது எந்த வகையிலும் துருக்கியில் மட்டும் இரு க்கின்ற பிரச்சினை அல்ல என்றும் கூறியிருக்கின்றார்.

# இந்திய அமைச்சர்கள் மீது அதிருப்தி தெரிவித்து ஆர்ப்பாட்டம்

(ராய்டர்)

மத்திய அமைச்சரவையில் சில நபர்களை அமைச்சர்களாக சேர்த்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து தே. ஜ.கூட்டணி எம்.பி.க்கள் முன்னாள் துணை பிரதமரும், இன்னாள் எதிர்க்கட்சித் தலைவரு மான அத்வானி, மற்றும் ஜோர்ஜ்பெர் னாண்டஸ் ஆகியோர் தலைமையில் ஜனாதிபதி மாளிகைக்கு ஊர்வலமாக சென்று ஜனாதிபதி அப்துல் கலாமிடம் மனுவும் கொடுத்தனர்.

மத்தியில் மன்மோகன்சிங் தலைமையில் காங்கிரஸ் அரசு பதவி ஏற்றுள்ளது. இந்த அரசில் லல்லுபிரசாத்யாதவ், தஸ்லிமுதீன் போன்றவர்கள் மத்திய அமைச்சர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். கறைபடிந்த நபர்களை இவ்வாறு அமைச்சரவையில் சேர்த்து இருப்பதற்கு தே.ஜ.கூட்டணி கடும் எதிர்ப்பு தெரிவித்து உள்ளது ஜனாதிபதி மாளிகைக்கு ஊர்வலம் செல்லவும் இவர்கள் திட்டமிட்டு இருந்தார்கள். அதன்படி நேற்று முன்தினம் இந்த ஊர்வலம் நடை பெற்றது. எதிர்கட் ச்சித்தலைவர் அத்வானி தே.ஜ. கூட்டணியின் அமைப்பாளர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் ஆகியோர் தலைமையில் தே.ஜ. கூட்டணி எம்.பி.க்கள் அனைவரும் ஜனாதிபதி மாளிகைக்கு ஊர்வலமாகப் புறப்பட்டனர். பாராளுமன்றத்திலிருந்து ஜனாதிபதி மாளிகைக்குச் சென்ற இந்த ஊர்வலத்தில் பாராளுமன்ற இரு அவையைச் சேர்ந்த தே.ஜ.எம்.பி.க்களும் கலந்து கொண்டனர்.

சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாமல் கையில் அட்டைகள் ஏந்திக்கொண்டு இவர்கள் ஊர்வலமாக சென்றனர். பிறகு நடவடிக்கை எடுக்கும்படி ஜனாதிபதியை வலியுறுத்துவோம் என்று பெர்னாண்டஸ் கூறினார்.

ஊர்வலத்தை ஒட்டி பாது

## உலக செய்திகள்

காப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன. இந்த ஊர்வலத்தில் பெர்னாண்டஸ், அத்வானி, ஜஸ்வந்த்சிங், சுஸ்மா சுவராஜ்.



அருண்ஜெட்லி, கல்ராஜ் மிஸ்ரா, பி.சி. தாமஸ், ஜனாகிருஷ்ண மூர்த்தி, கல்யாணசிங் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேனகாகாந்தி ஆகியோர் ஜனாதிபதி அப்துல்கலாமை சந்தித்து அவரிடம் மனு ஒன்றை அளித்தனர். இந்த விஷயத்தில் நியாயமான

# இத்தாலி சென்றுள்ள புஷ் பாப்பாண்டவரை சந்திப்பார்

(ராய்டர்)

இரண்டாவது உலகப் போரின் 60வது ஆண்டு நினைவு நிகழ்ச்சிகளில் பங்கேற் பதற்காக அமெரிக்க ஜனாதிபதி புஷ் இத்தாலிக்கு நேற்று சென்றார். இந்த விஜயத்தை முன்னிட்டு 10 000 பொலிசாரும் இராணுவத்தினரும் ரோம் நகரின் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். இந்த விஜயத்தின் போது ஜோஜ் டபிள்யூ புஷ் பரிசுத்த பாப்பரசர் 2வது அருளப்பர் சின்னப்பரையும் இத்தாலிய தலைவர்களையும் சந்தித்து ஈராக்கிய விவகாரங்கள் தொடர்பாக ஆராயவுள்ளதாகவும் தெரிவி க்கப்படுகின்றது. அமெரிக்காவின் பயங்கரவாதத்திற்கு எதிரான தாக்கு தலுக்கு இத்தாலி தனது முழுமை யான ஆதரவை தெரிவித்து 2900 துருப்புக்களை ஈராக்கிற்கு அனுப்பி வைத்தமையும் குறிப்பிடத்தக்கது இதேவேளை ஈராக்கில் அமெரிக்க படையினரால்



மேற்கொள்ளப்படுகின்ற தாக்குதல்களை கண்டித்து ரோம் நகரில் சுவரொட்டிகள் ஒட்டப்ப ட்டுள்ளன.

# தென் கிழக்கு நாடுகள் எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்க முயற்சி

(ராய்டர்)

உலகில் எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகள் தங்களுடைய உற்பத்தியை உடனடியாக 8 சதவீதத்தால் அதிகரிக்க தீர்மானித்துள்ளன. இதற்கமைய ஒரு நாளைக்கு 20 லெட்சம் பீப்பாய்கள் உற்பத்தியை அதிகப்படுத்த எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளின் எரிபொருள் அமைச்சர்கள் தீர்மானித்துள்ளனர்.

20 ஆண்டுகளில் விலை அதிகமாயுள்ள கச்சா எண்ணெயின் விலை உயர்வைத்தடுக்க எண்ணெய் உற்பத்தி அதிகரிக்கப்பட வேண்டும். என்று தொழில் வளம் பெற்ற நாடுகள் பரவலாக வேண்டு கோள் விடுத்தன தென்கிழக்கு நா டுகள் அமைப்பின் கூட்டம் தொட ங்குவதற்கு முன்னதாக சவூதி அரேபியா ஐக்கிய அரபு எமிரேட்டு க்கள் மற்றும் குவைத் ஆகியவை கூடுதலாக நாளொன்றுக்கு 25 லெட்சம் பீப்பாய்கள் எண்ணெய் உற்பத்தி செய்ய வலியுறுத்தியதாகவும் ஆனால் சிறியளவிலே உற்பத்தி அதிகரிக்கப்பட வேண்டுமென ஈரான் வாதிட்டு வருவதாகவும் கூறப்படு கின்றது.

# அமெரிக்க சி.ஐ.ஏ இயக்குனர் அடுத்த மாதம் பதவி விலகுகிறார்

(நமது நிருபர்)

அமெரிக்க மத்திய புலனாய்வுத்துறை இயக்குனர் ஜோர்ஜ் கென்னட் பதவி விலகியுள்ளாா என அமெரிக்க ஜனாதிபதி தெரிவித்துள்ளார். கடந்த ஏழு ஆண்டுகள் சி.ஐ.ஏ புலனாய்வு நிறுவனத்துக்கு தலைமை தாங்கிவந்த இவர் பதவி விலகுவதாக தெரிவித்திருக்கும் அறிவிப்பு பற்றி ஜனாதிபதி புஷ் கவலை தெரிவித்துள்ளார்.

# தென்னாபிரிக்காவிற்கு எதிராக களமிறங்க இந்தியா தீவிரம்



தென்னாபிரிக்காவிற்கு எதிரான தொடரில் டெஸ்ட் போட்டிகளையும் சேர்க்கும் தீவிர முயற்சியில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை உள்ளது.

இவ்வருட கடைசியில் தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி இந்தியா வருகிறது. அப்போது இந்தியா, தென்னாபிரிக்கா இரு அணிகளும் 7 ஒருநாள் போட்டிகளில் விளையாட திட்டமிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை செயலார் எஸ்.கே.நாயர் தெரிவிக்கையில், ''இரு அணிகளுமே இந்தவருடம் விளையாட வேண்டிய போட்டிகள் அதிக அளவில் உள்ளன. இரு அணிகளுமே இறுக்கமான போட்டி அட்டவணைகளுடன் உள்ளன. இருப்பினும் தென்னாபிரிக்காவிற்கு எதிரான தொடரில் டெஸ்ட், ஒருநாள் போட்கள் இரண்டையும் நடத்துவது நல்லது. இந்ததொடரில் டெஸ்ட், ஒருநாள் போட்டிகள் இரண்டையும் நடத்த தென்னாபிரிக்க கிரிக்கெட் வாரியத்திற்கு எழுதியுள்ளோம். தற்போது அவர்களுடைய பதிலுக்காக காத்திருக்கின்றோம்'' என்று கூறினார்.

தென்னாபிரிக்காவிற்கு எதிரான தொடரை இரண்டுகட்டமாக நடத்தும் இந்தியாவின் ஆலோசனையை, தென்னாபிரிக்கா நிராகரித்துவிட்டதாக அங்கிருந்து வெளியாகும் தகவல்கள் தெரிவித்தன. இந்த செய்திக்கு பதிலளித்த நாயர் மேற்கூறியவாறு தெரிவித்தார்.

இரண்டுகட்டமாக நடத்த இந்தியா வழங்கிய ஆலோசனையில் முதற்கட்டமாக ஒருநாள் தொடரையும், அதன்பிறகு மற்றொரு தேதியில் டெஸ்ட் தொடரை நடத்த கூறப்பட்டு இருந்தது.

இதுகுறித்து நாயர் மேலும் கூறுகையில், ''இருஅணிகளுக்கும் இடையேயான தொடர் குறித்து இதுவரை ஏதும் முடிவாகவில்லை. தென்னாபிரிக்காவின் பதிலுக்காக காத்திருக்கின்றோம். அதன்பின்னரே கிரிக்கெட் வாரிய பயண மற்றும் அட்டவணை கமிட்டி கூடி இந்த சீசனுக்கான அட்டவணை பற்றி முடிவு செய்யும். இம்மாத இறுதியில் அட்டவணை பற்றி முடிவுகள் வெளியிடப்படும்.

தென்னாபிரிக்காவிற்கு எதிரான தொடரை நவம்பரில் நடாத்த திட்டமிட்டுள்ளோம். ஏனெனில் ஆஸ்திரேலிய அணி இந்தியா வரஉள்ளது. டிசம்பரிலும் நடத்த திட்டமிடமுடியாது. ஏனெனில் இங்கிலாந்து அணி வரும் டிசம்பரில் தென்னாபிரிக்கா செல்கிறது. எனவே தென்னாபிரிக்காவிற்கு எதிரான தொடரை நவம்பரில் நடத்த திட்டமிட்டுள்ளோம்.

நவம்பர் 4 அல்லது 5-ம் தேதிக்குப் பின்னரே ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரை தொடங்க முடியும். ஆனால்,'' டிசம்பர் முதல்வாரம் வரை அவர்கள் இந்தியாவில் இருக்க முடியாது. இதுதான் தற்போது இருக்கும் முக்கிய பிரச்சினை'' என்றும் நாயர் கூறினார்.

தென்னாபிரிக்க அணி கடந்த 2000த்தில் கடைசியாக இந்தியாவில் டெஸ்ட் தொடரில் விளையாடியது. இந்ததொடரில் மேட்ச்பிக்சிங் பிரச்சினை வெடித்தது.

அப்போது கப்டனாக இருந்த ஹேன்சிகுரோனியாவிற்கு ஆயுட்கால தடை விதிக்கப்பட்டது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு விமான விபத்தில் அவர் பலியானது குறிப்பிடத்தக்கது.




## மேற்கிந்திய தீவுகள் வேகப்பந்து வீச்சாளருக்கு அபராதம்

மேற்கிந்திய தீவுகள் அணியின் வேகப்பந்து வீச்சாளரான டினோபெஸ்டுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. மேற்கிந்திய தீவுகள், வங்கதேச அணிக்கு இடையே நடைபெற்று முடிந்த முதல் டெஸ்ட் போட்டியில் சர்வதேச கிரிக்கெட் விதிகளை மீறியதற்காக மேற்கிந்திய தீவுகள் அணியைச் சேர்ந்த வேகப்பந்து வீச்சாளரான டினோ பெஸ்டுக்கு போட்டி சம்பளத்தில் இருந்து 75 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

22- வயதான பெஸ்டுக்கு இந்தத் தொடருக்கு மேட்ச் ரெப்ரியாக இருந்து வரும் ரோசான் மகானமா இந்த அபராதத்தை விதித்தார்.

வங்கதேச அணியின் 2வது இனிங்சின் போது 19வது ஓவரில் அந்த அணி வீரனான ராஜின் சலேரன் எடுக்க ஓடும்போது இடையூறாக இருக்கும் வண்ணம் வேண்டுமென்றே ரன் ஓடு பாதையில் நின்று கொண்டு இருந்ததற்காக பெஸ்டுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இது சர்வதேச கிரிக்கெட் சபை நடத்தை ஒழுங்கு விதிகளை மீறியதாகக் குற்றம் சாட்டப்பட்டு, இதற்காக பெஸ்டுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

## முரளிக்கு பதிலாக சமீரா ரணதுங்க இலங்கை அணியில் உருவாகிறார்

இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திரச் சுழல்பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரனுக்குப் பதிலாக மாற்று வீரர் ஒருவரை இலங்கை கிரிக்கெட் கண்டுபிடித்துள்ளது.

தனது அற்புதமான சுழற்பந்து வீச்சால் துடுப்பாட்ட வீரர்களை வீச்சாளரான முரளிதரனின் திறமைகளைக் கொண்ட 17-வது வயது பள்ளிக்கூட மாணவர் ஒருவரை இலங்கை கிரிக்கெட் கண்டுபிடித்துள்ளது.

முரளிதரன் உருவான கண்டியைச் சேர்ந்த சமீரா ரணதுங்க என்பவர்தான் அந்த வீரர். முரளிதரனின் வழித்தடத்தைப் பின்னற்றி மிகச் சிறந்த பந்து வீச்சாளராக ரணதுங்க உருவாகி வருகிறார்.

''முரளிதரனைப் போலவே சுழற்றக் கூடிய வலிமை கொண்ட சாமீரா ரணதுங்க எதிர்காலத்தில் சிறப்பாக விளையாடக்கூடிய அனைத்துத் திறமைகளையும் பெற்றுள்ளார்.

இந்த. வீரரின் பெயர் ரணதுங்க என்றவுடன் இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்கவிற்கு உறவினராக இருப்பாரோ என்று நினைத்துவிட வேண்டாம். முன்னாள் தலைவருக்கு சமீரா ரணதுங்காவிற்கும் இடையே எந்தத் தொடர்புமில்லை. கண்டியில் பள்ளி மாணவராக முரளிதரன் இருந்த போது இவருடைய திறமையை அடையாளம் கண்ட பயிற்சியாளரே, இப்போது சமீரா ரணதுங்கவிற்கும் பயிற்சியாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் நட்சத்திர சுழற் பந்து வீச்சாளரான முரளிதரன், தற்போது 527 விக்கட்டுக்களை வீழ்த்தி டெஸ்ட் கிறிக்கெட்டில் உலக சாதனை படைத்துள்ளார்.

## குப்பிலாம்பில் வாழும் எங்களுக்கு எப்போது மின்சாரம்?

பட்டிப்பளைப் பிரதேசத்திலுள்ள கிராமங்களான பண்டாரியாவெளி, படையாண்டவெளி ஆகிய இக்கிராமங்கள் இரண்டும் அடங்கும். இப்பிரதேசங்களில் ஓரிரு கிராமங்களைத் தவிர ஏனைய கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஏன் எங்கள் கிராமத்துக்கு இதுவரையும் மின்சாரம் வழங்கப்படவில்லை அயல் கிராமத்துக்கு வழங்கப்பட்ட மின் ஏன் எங்களுக்கு வழங்கப்படவில்லை அக்கிராமத்தில் வாழும் மக்கள்தான் இக்கிராமத்திலும் வாழ்கின்றார்கள். அவர்களுக்கு உள்ள வசதி எங்களுக்கு இல்லையா? அவர்களைப் போன்று நாம் பணம் கட்ட மாட்டோமா? இதற்கான அடிப்படைக் காரணம் என்ன? என்பது மக்களின் மனதில் பெரும் கேள்வி எழுப்பிக் கொண்டே வருகின்றது.

இக்கிராமத்தை எடுத்துக் கொண்டால் கிட்டத்தட்ட ஐந்நூறு குடும்பங்கள் வாழ்கின்றன இங்கு பல பட்டதாரி மாணவர்களும் வெளியாகி உள்ளனர்.

இவர்கள்தான் மின் வசதியில்லாமல் கல்வி கற்றார்கள் என்றாலும் எதிர் கால சந்ததியினரின் கல்வி வாழ்க்கைக்கு மின் வசதி கிடைக்காதா? வாழ்கையே குப்பி விளக்குத்தானா? காலம் காலமாக குப்பி விளக்கில் வாழ்ந்து கொண்டிருக்கும் எமது கிராமத்து மக்களுக்கு விடிவு கிடைக்காதா?

இக்கிராமத்துக்கு மின்சாரம் இல்லை என்பது ஒருபுறம் இருக்க இப்பிரதேசத்தில் பெயர் பெற்ற தேசத்துக் கோயில் எனப் போற்றப்படும் கலியுகத்தில் கண்கண்ட தெய்வமான நாக தம்பிரான் ஆலயம் இக்கிராமத்திலே அமைந்துள்ளது. இவ்வாலயத்திற்கு கூட மின்சார வசதி இல்லை வருடா வருடம் உற்சவம் நடைபெறுவது வழக்கம். இவ்வுற்சவ காலத்தின்போது வெளியிடங்களில் இருந்துதான் மின் பிறப்பாக்கிகள் பாவனைக்கு எடுக்கப்படுகின்றது. இதனால் அதிக பணம் செலவாகின்றது. இச்செலவினால் ஆலயத்தின் வருமானத்தில் நஷ்டம் ஏற்படுகின்றது. இதனை நிவர்த்தி செய்துதர யாரும் முன்வரமாட்டார்களா?

கடந்த காலங்களில் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் இக்கிராமத்துக்கு வந்து ஆனையாக்குவேன், பூனையாக்குவேன் என முழங்கினார்களே தவிர எதையும் செய்ய முன்வரவில்லை ஆனால் அவையெல்லாம் தேர்தல் காலத்தில் வாக்கு சேகரிப்பதற்காகத்தான் அவர்களுக்குரிய பதவி கிடைத்ததும் அவர்கள் அவற்றையெல்லாம் மறந்து விடுவார்கள் இதனை மக்கள் பின்புதான் உணருகின்றனர்.

எனவே மின்சார வசதியில்லாத இக்கிராமத்தின் எதிர் காலத்தை கருத்திற் கொண்டு எமது பகுதியில் இருந்து பாராளுமன்றம் சென்ற உறுப்பினர்களே சற்று சிந்தித்து இக்கிராமத்தின் எதிர் காலத்தை உணர்ந்து சற்று தீவிரமாக செயல்பட்டு எங்கள் கிராமத்திற்கு மின்சார வசதியை பெற்றுத் தருவீர்கள் என்ற நம்பிக்கையில் இக்கிராமத்தின் மக்கள் சார்பில் உங்கள் கவனத்திற்கு தருகின்றேன்.

எஸ்.பி.தரன்.

## வீதி ஓரத்தில் தேங்கி கிடக்கும் குப்பை கூழங்கள்

களுதாவளைப் பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசத்தில் நீண்ட நாட்களாக வாகனம் இல்லாத காரணத்தினால் வீதியோர, பொதுச் சந்தை, பொது இடங்களில் கழிவுகள் தேங்கிக் கிடக்கின்றன

ஊடகங்கள் சுட்டிக் காட்டியதன் பின்பு கழிவகற்றும் நடவடிக்கைக்காக, இருசக்கர உழவு இயந்திரம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. கல்லாறு, களுதாவளை, களுவாஞ்சிகுடி, தேற்றாத்தீவு, மாங்காடு, செட்டிபாளையம் போன்ற பிரதேசங்களை உள்ளடக்கிய மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபைக்கு நான்கு உழவு இயந்திரங்கள் வழங்க வேண்டும்

இருசக்கர உழவு இயந்திரம் வழங்கப்பட்டது ஒரு கண் துடைப்பு என பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர். எனவே இது தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட அரசியல் வாதிகள் நடவடிக்கை எடுக்க வேண் டுமென பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(எஸ்.ரவிந்திரன்)

## எங்கள் குரல்

### அம்பாறை மாவட்டத்தில் மீளக்குடியேறியோருக்கு அடிப்படை வசதியில்லை

அம்பாரை மாவட்டத்தில் கடந்த காலங்களில் போர்ச் சூழல் காரணமாக தமது சொந்த இடங்களில் இருந்து இடம் பெயர்ந்து விட்டு மீண்டும் தமது சொந்த இடங்களில் குடி யேறிய நூற்றுக் கணக்கான மக்கள் அடிப்படை வசதிகளின்றி கஷ்டத்தை அனுபவித்து வருகின்றனர். திருக்கோயில் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட காஞ்சிரங்குடா, தங்கவேலாயுதபுரம், கஞ்சிகுடியாறு, சாகாமம் போன்ற இடங்களில் குடியமர்த்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு குடி நீர், பொருத்தமான இருப்பிட வசதிகள் இல்லை. பாலைவனம் போன்ற பிரதேசம் போல் சனநடமாட்டம் மிகவும் குறைந்த இடங்களில் இம்மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இரவில் யானைத் தொல்லைகளாலும், பகலில் மாடுகளின் தொல்லைகளாலும் அல்லலுறும் அப்பாவி மக்களுக்கு இருப்பிடத்துக்காக சில கூரைத் தகடுகள் வழங்கப்பட்டு இருக்கின்றதே தவிர வேறு அடிப்படை தேவைகள் பலவற்றுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட வில்லை இங்குள்ள மக்களில் சிலர் அழுக்கடைந்த அசுத்தமான நீரைப் பருகி நோயையும் விலை கொடுத்து வாங்குபவர்களாக உள்ளனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு இங்கு வந்து குடியேறிய மக்களுக்கு குடியிருப்புக்களுக்கே மலசல கூட வசதிகள் செய்து கொடுக்கப் படவில்லை குறிப்பாக ஆண்கள் வெளிப் புறங்களுக்கு சென்று தமது இயற்கை கடன்களை முடித்தாலும் பெண்களின் நிலை திண்டாட்டமாக உள்ளது.

இரவு நேரங்களில் விச ஜந்துகளின் அச்சம் ஒருபுறம், இருள் சூழ்ந்த நிலையில் இம்மக்கள் மாலையானதும் தகரக் கொட்டிலுக்குள் முடங்கி கிடக்க வேண்டியுள்ளது.

இங்குள்ள மக்களுக்கு நிவாரணங்களை வழங்க முன்வருபவர்கள் அரசோ, அரச சார்பற்ற நிறுவனமோ எதுவானாலும் முதலில் குடி நீரை பவுசர்கள் மூலமாவது பெற்றுக் கொடுக்க முன்வரவேண்டும். மல சல கூட வசதியையும் காட்டு யானைகளிடமிருந்து தப்புவதற்காக மின்சாரம் இணைக்கப்பட்ட கம்பிகளால் சுற்று வேலியும் போடப்பட வேண்டும்.

## சிந்தனைக்கு



தமிழீழத் தனியரசே தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு இறுதியான, உறுதியான தீர்வு என்பதில் எமக்கு அசையாத நம்பிக்கையும் தெளிவும் உண்டு. எமது நிலைப்பாட்டை எமது எதிரி மட்டுமன்றி,முழு உலகமும் நன்கறியும்.

தமிழீழத் தேசியத் தலைவர்


ஈழநாதம்

மக்கள் தினசரி — மட்டக்களப்பு பதிப்பு

பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை.
தொலைபேசி:- 065-2226110
065-2226303
batti@eezhanatham.com
05.06.2004


## எழுச்சியுடன் நினைவு கூருவோம்

தமிழீழவிடுதலை வரலாற்றில் ஆனி ஐந்தாம் நாள் ஒவ்வொரு ஈழத் தமிழனும் நெஞ்சங்களில் நிறுத்தி நினைவு கூரும் ஒரு நாள்.

ஆம் தியாகி சிவகுமாரன் தமிழர் தேசிய விடுதலைக்கு வித்திட்டுச் சென்ற நாள். உரும்பிராய் சிவகுமார் சிறிலங்கா பொலிசாரின் முற்றுகைக்குள் உள்ளான போது சயனட் அருந்தி வீரச்சாவடைந்தார். 05.06.1974 இந்த வீரனின் நினைவு நாள் நினைவு கூரலுக்குட்பட்டதாகும்.

சிங்கள பேரினவாத அரசுகள் தமது இனவெறியாட்டத்தை கட்டவிழ்த்து விட்ட காலத்தில் தியாகி சிவகுமாரன் சிங்கள இனவாத சக்திகளுக்கு எதிராக தனது உணர்வுகளை வெளிக்கொணர்ந்தான்.

தமிழரசுக் கட்சியின் தீவிர பற்று சிவகுமாரனது எழுச்சி நோக்கிய பயணத்திற்கு உந்துதல் அளித்தது. அன்றைய காலகட்டத்தில் சிறிலங்கா பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா அவர்களின் கல்வி பாரபட்சமான நடவடிக்கையினால் மிக உணர்வு பொங்கிய தியாகி சிவகுமாரன் 1970ம் ஆண்டு நவம்பர் 24ம் திகதி தமிழர் தேசத்தில் அரசுக்கு எதிரான போராட்டத்தை நடாத்தினான். அன்றிலிருந்து சிவகுமாரன் மீதான பகைமை உணர்வுகள் சிங்கள இனவாத சக்திகளிடம் ஊற்றெடுத்தன. 26.08.1950ம் ஆண்டில்தாயக மண்ணில் பிறந்த சிவகுமாரன் தமிழரசுக் கட்சியின் தேசிய உரிமை நோக்கிய பார்வையில் பற்றுதல் அளித்தது.

தமிழரசுக் கட்சியின் கொள்கை தமிழ் தேசியத்தின் உரிமை என்னும் உணர்வு அவனை அறப்போராட்டத்தில் ஈடுபாடு செய்ய வைத்தது.

இவனது போராட்டம், வளர்ச்சி, ஈற்றில் சிங்கள அரசை கதி கலங்க வைத்து விடுமோ என்ற அச்சம் அன்றைய ஆட்சியாளர்களது மனதை குடைந்திருக்கலாம். அது தான் நயவஞ்சகத் தனமான முறையில் சிறிலங்கா பொலிசாரினால் சுற்றி வளைப்புக்குள்ளானான்.

சிறிலங்கா கூலிப் படைகள் சும்மா விட்டு விடாது சித்திரவதைப்படுத்தி விடுவார்கள் என்பதை விட அன்னியனின் கைகளில் சிக்கி மாய்வதை தியாகி சிவகுமாரன் விரும்பவில்லை. சயனட் அருந்தி வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

நாங்கள் எமது இலட்சியத்துக்கு எம்மை ஒப்படைத்திருக்கின்றோம் என்பதன் அடையாளச் சின்னம் தான் சயனைட். இந்த சயனைட் எங்கள் கழுத்தில் தொங்கும் வரை உலகில் எந்தச் சக்திக்கும் நாங்கள் அஞ்சமாட்டோம் என தமிழீழ தேசியத்தலைவர் தெரிவித்திருக்கும் கருத்துக்கு இலக்கணம் வகுத்துச் சென்ற தியாகியின் நினைவு கூரல்கள் தமிழர் தாயகம் எங்கும் எழுச்சியுடன் கொண்டாடப்படுவது பெருமைக்குரியது.

போர் ஒய்வு நிலையில் சமாதானத்தின் நுகர்வுகளுக்கான காத்திருப்புக்கள் பலவீனமடைந்து ஏமாற்றும் முகங்கள் தென்படத் தோன்றியிருக்கும் நிலையில் தேசியத் தலைமையின் கரங்களைப் பலப்படுத்துவதில் அக்கறை கொண்டவர்களாக தேச விடியலுக்கான எமது உரிமத்தை உறுதியோடு கேட்போம். தியாகி சிவகுமாரன் நினைவுகூரல்களை எழுச்சியுடன் வெளிப்படுத்துவோம்.

# ஒலுவில் துறைமுக காணி சுவீகரிப்பால் பாதிக்கப்பட்டோர் ஆர்ப்பாட்டப் பேரணி!

## -அலுவலகம் முன்பாக மறியற் போர்-

(ஏ.எல்.எம்.சலீம்.)

ஒலுவில் துறைமுக அபிவிருத்தி வேலைகளுக்கென காணிகள் சுவீகரிக்கப்பட்டமையால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் நேற்று (04.06.2004) வெள்ளிக்கிழமை பாரிய ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.

அத்துடன் ஒலுவில் கிராமத்தில் அமைந்துள்ள ஒலுவில் துறைமுகத்திட்ட அலுவலகத்தின் நுழைவாயில் முன்பாக சுமார் அரை மணி நேரம் அமர்ந்து மறியற் போராட்டத்திலும் அவர்கள் ஈடுபட்டனர்.

1994ம் ஆண்டு ஒலுவில் துறைமுக அபிவிருத்திக்கென வர்த்தமானி மூலம் சுவீகரிக்கப்பட்ட தமது குடியிருப்பு காணிகளுக்கு உடனடியாக தீர்மானிக்கப்பட்ட நஷ்டஈட்டுத் தொகைகளை வழங்க வேண்டுமென்றும்

தவறும் பட்சத்தில் தமது காணிகளை முன்னைய சுவீகரிப்புக்கான வர்த்தமானி அறிவித்தலை ரத்துச்செய்வதன் மூலம் மீண்டும் தமக்கு வழங்க வேண்டுமென்றும் கோரியே இந்தப் பாரிய ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

பாலமுனை மக்கள் மறுமலர்ச்சி மன்றம் எனும் தமது அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட இப் பேரணியில் காணியிழந்த குடும்பங்களைச் சேர்ந்த பெருந் தொகையான ஆண்களும் பெண்களும் கலந்து கொண்டனர்.

பாலமுனை உதுமாபுரம், அல் முனவ்வறா தைக்கியாப்பள்ளிவாசல் முன்றலிலிருந்து ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டப் பேரணி சுமார் ஒன்றரை மைல் தொலைவிலுள்ள ஒலுவில் துறைமுகத்திட்ட அலுவலகம் வரை வந்தடைந்தது.

இறுதியில் இத் திட்ட அலுவலகத்தின் நுழைவாயிலை வழிமறித்து ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட ஆண்களும் பெண்களும் அமர்ந்து மறியற் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

இவர்கள் தமக்கு நஷ்டஈடு வழங்கப்படாமையை கண்டிக்கும் வாசகங்களைக்கொண்ட சுலோக அட்டைகளை ஏந்தியிருந்ததுடன் கண்டனக் கோஷங்களையும் எழுப்பினர்.

''எட்டு வருடங்கள் ஏமாற்றியது போதும்நஷ்டஈட்டை உடன் வழங்கு'' ''கடந்த அரசின் அமைச்சரவை நஷ்டஈட்டுக் கென அங்கீகரித்த 540 மில்லியன் ரூபாவை தடுத்து நிறுத்திய ஜனாதிபதியே உடன் இத்தொகையை வழங்க நடவடிக்கை எடு. உட்பட பல வாசகங்களைக் கொண்ட சுலோக அட்டைகளை, ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் ஏந்தியிருந்தனர். அதனைக் கோஷமாகவும் எழுப்பினர்.

தவிரவும் டென்மார்க் அரசின் உதவியுடன் 3600 மில்லியன் செலவில் ஒலுவில் துறைமுக அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட கடந்தஅரசுகாலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு ஒப்பந்தம் வழங்கும் தறுவாயிலிருந்த போதிலும் தற்போதைய நிலையில் இத்தறைமுக நிர்மாண வேலைகள் தொடர்பில் அரசின் நிலைப்பாடு புரியாது மக்கள் அங்கலாய்த்த வண்ணமுள்ளனர்.

இதேவேளை இத்துறைமுக அபிவிருத்தி தொடர்பில் காணிகளை இழந்தவர்களுக்கும் ,பாதிக்கப்படும் மீனவர்களுக்கும் நஷ்டஈடு வழங்கவென கடந்த அரசின் இறுதிக்காலப் பகுதியில் அமைச்சரவை 540 மில்லியன் ரூபாவை அனுமதித் திருந்தது.

ஆனால் தேர்தல் காலமாதனால் இதனை தற்காலிகமாக வழங்க வேண்டாமென ஜனாதிபதி தடைவிதித்திருந்தார்.

ஆனால் தேர்தல் முடிந்து மூன்று மாதங்களுக்கு மேல்கடந்தும் ஏழை மக்களுக்கான இந்த நஷ்டஈடு இன்னும் வழங்கப்படாது இரு ப்பது ஏன்? என கேள்விகள் எழுப்படுகின்றன.

தமக்கு ஒருமாத காலத்திற்குள் நஷ்டஈடு வழங்கப்படாவிட்டால் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டமொன்றில் குதிக்கவிருப்பதாக சுவீகரிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்கள் எச்சரித்துள்ளனர்.

துறைமுக அபிவிருத்திக்கென ஒலுவில்,பாலமுனை, சின்னப் பாலமுனைப் பகுதிகளிலிருந்து 223 ஏக்கர் காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளதுடன் இதனால் நிரந்த குடியிருப்பாளர்களான 200 குடும்பங்களும், 300தற்காலிக குடியிருப்பாளர் குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# வடக்கு கிழக்கில் சிங்கள மொழி மூல தொண்டராசிரியர் 150 பேருக்கு நிரந்தர நியமனம்

(வி.ரி.சகாதேவராஜா)

வடக்கு கிழக்கில் சிங்கள மொழி மூல தொண்டராசிரியர்கள் 150 பேருக்கு மாகாண கல்வியமைச்சு நிரந்தர நியமனங்களை வழங்கியுள்ளது.

இவர்கள் 1ம் திகதி செவ்வாய்கிழமை கடமையேற்றனர். திருகோணமலை,கந்தளாய், அம்பாறை, மகாஓயா, தெகியத்தகண்டிய ஆகிய பிரதேசங்களிலுள்ள சிங்களப் பாடசாலைகளுக்கு இவர்கள் நியமிக்கப்பட்டனர்.

வட கிழக்கு மாகாண கல்வியமைச்சுக்கு 193 சிங்கள மொழி மூல ஆசிரியர்களது பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இவற்றில் பொதுச் சேவை ஆணைக்குழு 150 தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்க அங்கீகாரமளித்திருந்ததாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்கள் இதுவரை சுமார் 7 நேர்முகப் பரீட்சைகளுக்கு முகங்கொடுத்திருந்தனர். இறுதியாக வடகிழக்கு மாகாண கல்விச் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் அம்பாறைக்கு விஜயம் செய்த போது ஆவணங்களை ஒப்பு நோக்கிச் சென்றிருந்தார்.

அதன் பிறகு, கடந்த வியாழக்கிழமை (27.05.2004) அமைச்சிலிருந்து நியமனக் கடிதங்கள் உரிய தொண்டர் ஆசிரியர்களுக்கு அனுப்பப்பட்டது.

வட கிழக்கில் வழங்கப்பட்ட 150 தொண்டர் ஆசிரியர்களுள் சுமார் 100 பேர் அம்பாறை, மகாஒயா, தெகியத்தகண்டிய, ஆகிய வலயங்களுக்கு நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எஞ்சிய 43 தொண்டர் ஆசிரியர்களின் விபரக் கோவையில் சுற்று முரண்பாடு இருப்பதால் தீவிர பரிசீலனையின் பின்னர் நியமனம் வழங்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதே வேளை வடகிழக்கில் 1000 தமிழ் மொழி மூல தொண்டர் ஆசிரியர்கள் நியமிக்கும் திட்டத்தின் கீழ் இதுவரை 909 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. கடமையைப் பொறுப்பேற்காமலும், நியமனம் பெறாமலும் உள்ள 145 பேருக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் என்று வடக்கு கிழக்கு மாகாண தொண்டாசிரியர் ஒன்றியம். பல அழுத்தங்களை பல தரப்பிலும் பிரயோகித்து வருகின்றனர். ஆனால் இன்னும் பலன் கிட்டவில்லை.

## தண்ணீரின்றி மீளக் குடிபெயரும் தங்கவேலாயுதபுர மக்களுக்கு உதவுமாறு கோரிக்கை

(வேதசகா)

அம்பாறை மாவட்டத்தில் மீள் குடியேறிய தங்க வேலாயுதபுர மக்கள் மற்றுமொரு பாரிய பிரச்சினையை எதிர் நோக்கி வருகிறார்கள்

வீடு இல்லை தளபாடமில்லை, கிடுகு இல்லை, என்றிருந்த மக்கள் தற்போது பலத்த தண்ணீர் தட்டுப்பாட்டை எதிர்கொண்டுள்ளனர்.

அங்கு ஷோவா என்ற நிறுவனம் அமைத்துக்கொடுத்த ஓரிரு கிணறுகளில் கூட தண்ணீரில்லை இதனால் மக்கள் சுமார் 2 கி.மீற்றர் நடையில் சென்று சிறிய நீர்நிலைகளில் நீர் பெறவேண்டியுள்ளது.

சேனைப்பயிர் செய்கையே இவர்களது ஜீவனோபாயத் தொழில் அதனைச் செய்வதற்கு நீரில்லை. அதனால் சிலர் அங்கிருந்து வெளியேறி வருகின்றனர். பாடசாலைப் பிள்ளைகளுக்கும் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லையென்று அதிபர் கே.தெய்வேந்திரன் கூறுகிறார்.

தண்ணீர் இன்றி அலையும் அம் மக்களின் அவல நிலையைப் போக்க அரச அரசசார்பற்ற நிறுவனங்கள் முன்வர வேண்டும்.என அந்த ஏழை மக்கள் கண்ணீர்மல்க வேண்டுகோள் விடுக்கின்றனர்.

ஈழநாதம்
மட்டக்களப்பு பதிப்பு மக்கள் நாளிதழ்
Eezhanatham

## ஜனாதிபதி சின்னம் பெறுவதற்கு மிக்கல் கல்லூரி மாணவன்செயற்திட்டம்

(போரதீவுப்பற்று)

மட்டக்களப்பு புனிதமிக்கேல் கல்லூரியைச் சேர்ந்த சாரண மாணவன் செல்வன். த.கோகுலன் ஜனாதிபதி சின்னம் பெறுவதற்கான செயற்திட்டத்தை முன்னெடுத்து பூர்த்தி செய்துள்ளார்.

மட்டக்களப்பு ஹரீஸ் சிறுவர் இல்லத்திற்கு புதிதாக ஒரு சமயலறை அமைத்துக் கொடுத்துள்ளதுடன் இல்லச் சுவர்களுக்கு தீந்தை பூசி அழகுபடுத்திக் கொடுத்துள்ளார். அத்தோடு ஹரீஸ் இல்லத்திற்கான பெயர்ப்பலகை ஒன்றையும் செய்து கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## போரதீவு பிரதேச விளையாட்டுப் போட்டியில் களுமுந்தன்வெளி கழகம் முதலிடம்

(போரதீவுப்பற்று)

போரதீவுப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் பிரதேச செயலாளர் கே. கருணாகரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சிறந்த விளையாட்டுக் கழகமாக களுமுந்தன்வெளி விநாயகர் விளையாட்டுக் கழகம் 163 புள்ளிகளைப் பெற்றுத் தெரிவு செய்யப்பட்டது. இரண்டாமிடத்தை பழுகாமம் சூட்டிங் ஸ்டார் விளையாட்டுக் கழகம் 158 புள்ளிகளைப் பெற்று தெரிவு செய்யப்பட்டது. 2004ம் ஆண்டுக்கான சிறந்த விளையாட்டு வீரனாக பழுகாமம் சூட்டிங் ஸ்டார் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த எஸ். ஜெயகாந்தனும், சிறந்த வீராங்கனைகளாக சூட்டிங் ஸ்டார் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த யோ. ஜீவராணி களுமுந்தன்வெளி விநாயகர் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த அ.கௌரி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டார்கள். இப்போட்டிக்கான வெற்றிக் கிண்ணங்களை வேள்ட்விஷன் நிறுவனம் வழங்கியது.

## தொழில் நுட்ப பயிற்சி முடித்த இருபது பேருக்கு சான்றிதழ்!

(அக்கரைப்பற்று நிருபர்)

சில்வற்றோன் தொழில் கல்வி நிறுவனத்தில் 2003-2004க்கான தொழில் நுட்ப பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்த 20 மாணவர்களிற்கான சான்றிதழ் வழக்கும் வைபவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை சில்வற்றோர் பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மின்னியல், குழாய்நீர் இணைப்பு, சாரதிபயிற்சி போன்ற துறைகளில் பயிற்சி பெற்ற 20 தமிழ், முஸ்லிம் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. இப்பயிற்சி நெறி ஒருவருடகால பயிற்சி நெறி என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிறுவனம் இப்பகுதியில் கடந்த 32 வருடங்களாக பாதிக்கப்பட்ட வறிய மாணவர்களுக்கு தொழில் பயிற்சிகளையும் வேலை வாய்பிற்கான ஆலோசனைகளையும், உதவிகளையும் வழங்கி வருகின்றது. இங்கு பல்வேறு பயிற்சிகளைப் பெற்ற மாணவர்கள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் சுயதொழில் வாய்ப்புக்களை பெற்றுள்ளனர்.

சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட இந்தியாவைச் சேர்ந்த சங்கைக்குரிய பெரியார் அஷ்ஷெய்க் அல்குதூப் நக்ஸ்பந்தி ஹலலாஜி மன்சூர் அவர்கள் பயிற்சியை முடித்தவர்களிற்கு சான்றிதழ் வழங்கி ஆசீர்வதித்தார். இந்நிகழ்வில் பயிற்சி நிலையத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் எம். ஏ. பாறூக் அவர்களும் கலந்து கொண்டார்.

## கல்முனை அதிபர்கள் சங்கம் கூடி ஆராய்வு

(ஏ.எல்.எம்.சலீம்)

கல்முனை கல்வி மாவட்டத்தில் அண்மையில் க.பொ.த. உயர் தரப்பரீட்சையில் மோசடிகள் இடம் பெற்றுள்ளதாக எழுந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக கல்முனை மாவட்ட அதிபர்கள் சங்கம் கூடி ஆராயவுள்ளது.

இன்று சனிக்கிழமை சாய்ந்தமருது அல்கிலால் வித்தியாலயத்தில் மேற்படி கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

## கண்ணிவெடி அகற்றும் பணியில் மட்.மாவட்டத்தில் நான்கு குழுக்கள்

(எம்.யுவராஜ்)

கண்ணிவெடிகள் அகற்றும் மனித நேய அமைப்பான மெக் நிறுவனத்தினரால் வெல்லாவெளி, பெரியபுல்லுமலை ஆகிய இடங்களில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு மேற்படி இரு பிரதேசங்களிலும் வெவ்வேறு இடங்களில் இப்பணிகள் நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

### தமிழ் கூட்டமைப்பு...

தேசியக் கூட்டமைப்பு சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது தொடர்பாக முன்னெடுக்க வேண்டிய பணிகள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி சமாதானச் செயலகத்தில் நடைபெறும் இக்கலந்துரையாடலில் தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் 22 பேரும் கலந்து கொள்வர் என கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

# மூத்த பத்திரிக்கையாளர் கோபுக்கு தேசியத் தலைவர் விருது வழங்கி கௌரவிப்பு!

(நமது நிருபர்)

மூத்தி பத்திரிக்கையாளர் எஸ்.எம். கோபாலரத்தினம் (கோபு) தமிழீழ தேசியத் தலைவர் அவர்களால் நேற்று பாராட்டி விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக ஊடகத்துறையில் குறிப்பாக பத்திரிகையுலகில் பணியாற்றி தமிழ்த் தேசியத்திற்கும் தமிழ் இனத்தின் எழுச்சிக்கும் மகத்தான சேவையாற்றி உள்ளார்.

எழுத்துத்துறையில் இவரின் எழுத்து நடையானது கருத்துக்களின் முன்வைப்பு முன்வைத்த கருத்துக்களுக்கு ஏற்ற தலைப்பால் மிகவும் வித்தியாசமானதாகவும் கூர்மைப்படுத்தப்பட்டதாகவும் இருக்கும் அதேநேரத்தில் வாசகர்களின் மனங்களை கவ்விப்பிடித்து அவர்களை அதன்பால் சிந்திக்க தூண்டும் ஈர்ப்பினைக் கொண்டதாகவும் இருக்கும் வாசகர் பரப்பில் இருக்கக் கூடிய எல்லாத் தரப்பினரையும் கருத்தில் எடுத்து எளிய நடையில் புரியும் வகையில் சொற்களையும், சொற்தொடர்களையும் கையாண்டு ஆக்கங்களை படைத்துள்ளார்.

இதன் மூலம் எல்லா மக்களையும் போராட்டத்தின் பால் சிந்திக்கத் தூண்டிய சேவையை மிகத்திறம்பட ஆற்றியுள்ளார். இச்சேவையைப் பாராட்டி நேற்று தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் புலிச்சின்னம் பதித்த விருது வழங்கிக் கௌரவித்துள்ளார்.

பத்திரிகையாளனுக்கு இருக்க வேண்டிய முக்கிய பணியாகிய எதிர்காலத்தை நிகழ்காலத்துடன் இணைத்துக் கருத்துக்களை முன்வைக்கும் சிறப்பு இயல்பு இவரிடம் ஆழமாக குடிகொண்டிருந்தது இதனால் அவரது ஒவ்வொரு படைப்புக்களும் அந்த படைப்புக்களின் தலைப்புக்களும் உயிரோட்டமுள்ளவையாகவும் உள்ளன.

இத்தகைய ஒரு சிறந்த பத்திரிகையாளன் தொடர்ந்தும் தனது சேவையை ஆற்றி பத்திரிகை உலகிற்கும் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலை வரலாற்றுக்கும் பெரும்பணியாற்ற வேண்டும் அத்துடன் வளர்ந்துவரும் இளைய ஊடகவியலாளர்களுக்கு வழிகாட்டியாக அமைய வேண்டும் என்பதையும் தெரிவித்த அவரின் நீண்டகால சேவையைப் பாராட்டுவதோடு தொடர்ந்தும் சிறப்பாகப் பணியாற்ற எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம் என தமிழீழ விடுதலைப்புலிகளின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அதிபர் கிருபைராசாவுக்கு சேவை நலன் பாராட்டு!

(செ.பேரின்பராசா)

பெரியகல்லாறு விநாயகர் வித்தியாலயத்தில் கடந்த ஆறு வருட காலமாக அதிபராகவிருந்து அளப்பரிய சேவையாற்றிய அதிபர் சோ. கிருபைராசாவுக்கான சேவை நலன் பாராட்டு விழாவும், தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பெரியகல்லாறு இந்து கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

அதிபர் எஸ்.முருகானந்தம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பட்டிருப்பு கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ந.புள்ளநாயகம் பிரதம அதிதியாகவும், கோட்டக் கல்விப் பணிப்பாளர் தெ.சுப்பிரமணியம், உதவிக் கல்விப் பணிப்பாளர்களான செ.சிவநேசராசா, ஜீ.அன்னநவபாரதி (சுதன்), என்.நாகராசா ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் ஓய்வு பெற்ற அதிபர் எஸ். கிருபைராசாவுக்கு தங்கப் பதக்கம், வாழ்த்துப் பத்திரம், பொன்னாடை போர்த்துதல் போன்ற கௌரவமளிக்கப்பட்டதுடன், அதிதிகள், ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்களின் வாழ்த்துரைகளும் பரிசாக கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

## இறக்காமம் பகுதியில் பாம்புத்தொல்லை

(அக்கரைப்பற்று நிருபர்)

இறக்காமம் பிரதேசத்தில் மாணிக்கமடு, நல்லதண்ணிமலை, அமீர்அலிபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் குளிப்பதற்காக இறக்காமம் வில்லுக்குளத்தை பயன்படுத்துவது வழக்கம்.

தற்போது இறக்காமம் வில்லுக்குளத்தின் நீர்மட்டம் உயர்வாக இருப்பதாலும், குளத்திலிருந்து நீர் ஓட்டமில்லாது இருப்பதாலும் சல்வீனியா, ஐக்கோணியா (ஆற்றுவாழை) போன்ற தாவரங்கள் குளக்கரையை மூடியிருப்பதால் அப்பகுதிமக்கள் குளிப்பதற்கு பெரும் சிரமப்படுகின்றனர். அத்துடன் மிகவும் முக்கியமாக சல்வீனியா, ஆற்றுவாழை போன்ற தாவரங்களில் சாக்குப்புடையான், நல்லபாம்பு போன்ற பாம்பு இனங்கள் இருப்பதாகவும் அவை இரவு நேரங்களில் கரையோரங்களில் உள்ள வீடுகளிற்குள் செல்வதால் மக்கள் பீதியும் அச்சமும் கொண்டு நித்திரை இல்லாமல் பாம்பு அடிப்பதிலேயே ஈடுபட்டு வருவதாக அப்பகுதி மக்கள் கவலையும் விசனமும் தெரிவிக்கின்றனர்.

## உலக வங்கி உதவியுடன் அம்பாறை மாவட்டத்தில் 100 வீடுகள்

(எஸ்.சிவராசா)

உலக வங்கியின் நிதியுதவியுடன் (நேப்) வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்புனரமைப்பு திட்டத்தின் மூலம் 3 பிரதேச செயலகங்கள் தெரிவு செய்யப்பட்டு அதில் 100 வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவிருக்கின்றது.

இத்திட்டத்தில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள மகாஓயா, திகாமடுல்ல, பொத்துவில் ஆகிய பிரதேச செயலகங்களில் இத்திட்டம் அமுல்படுத்தப்படும் இதில் திருக்கோயில் பிரதேச செயலகத்தில் கஞ்சிகுடிச்சாறு, கிராம சேவகர் பிரிவில் குளத்தடி எனும் கிராமத்தில் 34 வீடுகள் நிர்மாணிப்பதற்கான பூர்வாங்க வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இது தொடர்பாக உலக வங்கிக் குழுவினர் குளத்தடி கிராமத்து மக்களை நேரில் சந்தித்து விளக்கமளித்துவிட்டுச் சென்றதாக திருக்கோவில் பிரதேச செயலக அபிவிருத்தி திட்ட உத்தியோகத்தர் க. ஜீவராஜ் அவர்கள் ஈழநாதம் மட்டக்களப்பு பதிப்பிற்குத் தெரிவித்தார்.

### மட்.சிறைச்சாலை...

வாளர்களைப் பார்வையிடுவதற்காகவே இவர் விஜயம் மேற்கொண்டதாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை மட்டக்களப்பு சிறைச்சாலைக் கைதிகள் நலன்கருதி வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டியொன்றினை விரைவில் வழங்கவுள்ளதாகவும் உறுதியளித்துள்ளாரென்றும் தெரிவிக்கப்படுகிறது.

### அக்கரைப்பற்றில்...

உத்தரவைப் பிறப்பித்தார்.

இருவரிடமும் பிஸ்ரல் ஒன்றையும், கைக்குண்டொன்றையும், 20 ரவைகளையும் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சேவை விஸ்தரிப்பு

(அக்கரைப்பற்று நிருபர்)

அக்கரைப்பற்று பிரதேசத்தில் வாடிக்கையாளர் நன்மை கருதி அக்கரைப்பற்று மக்கள் வங்கிக்கிளை சனிக்கிழமைகளில் முற்பகல் 8.30 மணி முதல் பிற்பகல் 1.00 மணிவரை வங்கி அலுவல்களிற்காக திறந்திருக்கும் என்பதை வாடிக்கையாளர்களிற்கு அறிவித்துள்ளனர். இச்சேவை கடந்த சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

### கதிரவெளி...

யின் பெயர் பலகையினை தளபதி சுகிலன் திரைநீக்கம் செய்து வைத்தார். தியாகி திலீபன் மருத்துவமனையினை வளாகப் பொறுப்பாளர் தளபதி உமாராம் திறந்து வைத்தார்.

சிறப்புரையினை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர்,தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் அருண் ஆகியோர் நிகழ்த்தினர். நன்றியுரையினை கதிரவெளிப் பாடசாலை ஆசிரியர் நிகழ்த்தினார். இந்நிகழ்வில் பெருந்திரளான பொதுமக்களும், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் தலைவர்களும் கலந்து சிறப்பித்தனர். தொடர்ந்து மருத்துவமனையில் நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

### கல்முனை...

லாளர் திருமதி கமலாம்பிகை சிவசிதம்பரம் அவர்களின் இடமாற்றக் கட்டளைக்கிணங்க பல்வேறு திணைக்களங்களிலிருந்தும் மாநகரசபைக்கு இலிகிதர்கள் இடமாற்றம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கடந்த முதலாம் திகதி முதல் இவர்கள் கடமைக்கு வரவேண்டியிருந்தும் இதுவரை பொறுப்பெடுக்காதது குறித்து மாநகர சபையின் ஆணையாளர் மாகாண பொது நிர்வாக அமைச்சின் செயலாளரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

ஏலவே கல்முனை மாநகர சபையில் கடமையாற்றிய இலிகிதர்கள் தங்களது விடுவிப்புக் கடிதங்களை பெறாது சுகயீன விடுமுறையில் நிற்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### மட்.உணவு...

என்பவரை கைது செய்துள்ளனர். மேலும் இருவர் தலைமறைவாகியுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சம்பவங்கள் தொடர்பாக பொலிசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.